Follow us:

# தமிழன்

THAMILAN தமிලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 459 பிலவ வருடம், மாசி மாதம் 07ஆம் திகதி சனிக்கிழமை
(19.02.2022) ஹிஜ்ரி - 1443, ரஜப் - 17, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.30

## தினசரி மின்வெட்டு திடீரென அமுலானது

02 பக்கம்

## லான்சாவை தொலைபேசியில் கடுமையாக மிரட்டிய நிசாந்த

02 பக்கம்





கங்காராம நவம் பெரஹெராவில் கலந்துகொண்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர்களுடன் உரையாடுகிறார். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணிலும் அமைச்சர் நாமலுடன் அளவளாவுகிறார்.

(படப்பிடிப்பு:- லலித் பெரேரா, பிரதீப் தம்பரகே)

# ஏப்ரல் 21 தாக்குதல்; ஹேமசிறி, பூஜித் விடுதலை!

உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாதத் தாக்குதலை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை உள்ளிட்ட அனைத்து குற்றச்சாட்டுகளில் இருந்தும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

நாமல் பலல்லே, ஆதித்திய பட்டபெந்திகே, மொஹமட் இஸ்ஸடீன் உள்ளிட்ட மூவரடங்கிய விசேட மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாமினால் குறித்த இருவரையும் விடுதலை செய்யுமாறு நேற்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

பிரதிவாதி தரப்பு சாட்சியம் அழைக்கப்படாது, நீதிபதிகள் குழாமின் ஏகமனதான தீர்மானத்திற்கு அமைய முன்னாள் பாதுகாப்பு செயலாளரும் முன்னாள் பொலிஸ்மா அதிபரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள்... 02 பக்கம்



படப்பிடிப்பு : பிரதீப் தம்பரகே

## இந்திய வம்சாவளி மக்களின் அரசியல் ஆவணம் திங்கட்கிழமை கொழும்பில் இறுதி வடிவம் பெறும்

### த.மு.கூ. தலைவர் மனோ கணேசன் எம்.பி.



தமிழ் முற்போக்கு கூட்டணியின் கோரிக்கையின்பேரில், கண்டி சமூக அபிவிருத்தி மன்றத்தின் சார்பில் அதன் தலைவர் பி.முத்துலிங்கம் மற்றும் சமூக செயற்பாட்டாளர் கௌதமன் பாலச்சந்திரன் ஆகியோரின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் இந்திய வம்சாவளி மலையக மக்களின் அரசியல் ஆவண வரைபு, பெப்ரவரி 21ஆம் திகதி திங்கட்கிழமை கொழும்பில் கலந்துரையாடப்பட்டு இறுதி வடிவம் பெறும்.

இந்தக் கலந்துரையாடலில் தமிழ் முற்போக்கு கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள், கூட்டணிக் கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் மலையக சிந்தனையாளர்கள் கலந்துகொள்வார்கள் எனத் தமிழ் முற்போக்கு... 02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..




## நிலைபெறுதகு வலுசக்தி சபைக்கு ஜனாதிபதி கோட்டா திடீர் விஜயம்




கொழும்பு 07, ஆனந்த குமாரசுவாமி மாவத்தையில் அமைந்துள்ள இலங்கை நிலைபெறுதகு வலுசக்தி அதிகாரசபைக்கு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று திடீர் விஜயத்தை மேற்கொண்டார்.

நீர், சூரிய சக்தி, காற்று போன்ற மீள்புதுப்பிக்கத்தக்க சக்திவலுக்களைக்கொண்டு மின்னுற்பத்தியை மேற்கொள்வதற்குள்ள இயலுமை தொடர்பில், இலங்கை நிலைபெறுதகு வலுசக்தி அதிகாரசபையின் அதிகாரிகளை நேரடியாகச் சந்தித்து தகவல் தெரிவித்துகொள்ளும் நோக்கிலேயே, ஜனாதிபதி இந்தத் திடீர் விஜயத்தை மேற்கொண்டார். 02 பக்கம்

## AMNESTY INTERNATIONAL
## பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்து செய்யுமாறு சர்வதேச மன்னிப்புச் சபை மீண்டும் வலியுறுத்து

02 பக்கம்



## எரிபொருளுக்கு அறவிடப்படும் வரிகளை நீக்குமாறு கோரிக்கை

### எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில, நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷவிடம் விடுத்தார்



02 பக்கம்

## சமூக அக்கறையும் தொலைநோக்கும் ஊடகங்களுக்கு இருக்கவேண்டும்

### அமைச்சர் டக்ளஸ் கருத்து



போரியலின் பக்கம் கவனம் செலுத்திய ஊடகங்கள் போரினால் வதைப்பட்ட மக்களின் வாழ்வியல் பற்றியும் கவனம் செலுத்தியிருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தன்னால் ஆரம்பத்திலிருந்து வலியுறுத்தப்பட்டு வந்த 13ஆம் திருத்தச் சட்டத்தினை வலுப்படுத்தி வந்தால் பாரிய அழிவுகளை தடுத்திருக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் வெளியீட்டுப் பணியகத்தின் கிளை காரியாலயத்தினை நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் அங்குரார்ப்பணம்... 02 பக்கம்

### உஷ்



உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால , அவரது ஆட்சிக்காலத்தில் பணியாற்றிய பாதுகாப்பு அதிகாரிகள் சிலரிடம் விசாரணைகள் நடத்த ஏற்பாடுகள் நடப்பதாக தகவல்.

இதனால் மைத்ரி தரப்பு கடும் விசனத்தில் இருப்பதாக சொல்லப்படுகிறது. கூடிய விரைவில் சுதந்திரக்கட்சி ஆட்சியில் இருந்து வெளியேறுமாம்.



## ஆவி நுழைந்ததாக கூறிய மகனால் இத்தாலியில் தாயார் படுகொலை

இத்தாலியில் இலங்கை பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் அவரின் மகன் அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளார். மிலான் நகரத்தில் உள்ள தனது வீட்டில் இலங்கை பெண்ணை கொலைசெய்ததாக கூறும் 25 வயதுடைய மகன் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார் என அந் நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. 02 பக்கம்

## அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர் டொனால்ட் மார்ச்சில் இலங்கை வருகை



மனித உரிமைகள், வர்த்தகம் மற்றும் முதலீடுகள் தொடர்பில் கவனம் செலுத்தும் பேச்சுவார்த்தைகளுக்காக, தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர் டொனால்ட் லூ அடுத்த மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் அவர் இலங்கைக்கு விஜயம் செய்வது இதுவே முதல்முறையாகும். 02 பக்கம்

# பொலிஸ் கான்ஸ்டபிள் தங்காலையில் கொலை

தங்காலை – வித்தாரந்தெனிய பகுதியில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள், அவரது வீட்டின் அருகில் ஹோட்டல் நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சிலரால் தாக்கி கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இந்த சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலில் பொலிஸ் கான்ஸ்டபிளின் மனைவி மற்றும் மற்றுமொருவர் காயமடைந்துள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

## லான்சாவை தொலைபேசியில்...

இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சாவை மிகவும் கடுமையாக தொலைபேசி வாயிலாக மிரட்டி இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த அச்சுறுத்தல் விடுத்துள்ளார். இது தொடர்பான குரல்பதிவு ஊடகங்களில் வெளியிடப்பட்டுள்ளது.

"நீ போனை கட் பன்னினால் பரவாயில்லை, எனினும் எனது தொகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்களைக் கொண்டு பாதைகளை அமைத்து எங்களது பாதைகளை நிறுத்தினால் நான் ஊடக சந்திப்பு ஏற்பாடு செய்து நிமல் லான்சா உன்னைத் தாக்குவேன். தவிடுபொடியாகும் வகையில் தாக்குவேன்" என இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த பேசும் உரையாடலே சமூக ஊடகங்களில் வெளிவந்துள்ளன.

லான்சாவின் வட்ஸ்அப்புக்கு இந்த குரல்பதிவு அனுப்பப்பட்டுள்ளது.

இவ்வாறு அச்சுறுத்தல் விடுத்த அமைச்சர் சனத் நிசாந்த, பிறிதொரு நாளில் அமைச்சர் நிமல் லான்சாவுக்கு எதிராக ஊடக சந்திப்பு ஒன்றில் கருத்து வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஏப்ரல் 21 தாக்குதல்:...

பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோருக்கு எதிராக தலா 855 குற்றச்சாட்டுகளின்கீழ், மூவரடங்கிய விசேட மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபரால் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

## தினசரி மின்வெட்டு...

இரண்டு கட்டங்களாக நாடளாவிய ரீதியில் மின்வெட்டை அமுல்படுத்த பொதுபயன்பாடுகள் ஆணைக்குழு, இலங்கை மின்சார சபைக்கு அனுமதி வழங்கியுள்ளது.

அதற்கமைய, பிற்பகல் 2.30 முதல் மாலை 6.30 வரையான காலப்பகுதியில் ஒரு மணித்தியாலத்துக்கும், மாலை 6.30 தொடக்கம் இரவு 10.30 வரையான காலப்பகுதியில் 45 நிமிடங்களுக்கும் மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

நாடளாவிய ரீதியில் A,B,C,D என நான்கு வலயங்களின்கீழ் மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எரிபொருள் இன்மையால் 400 மெகாவோட் மின்னுற்பத்தியை மேற்கொள்ளக்கூடிய மின்பிறப்பாக்கிகள் செயற்படவில்லை என பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க குறிப்பிட்டார்.

இதனால் எதிர்பாராத விதமாக மின்வெட்டை அமுல்படுத்த வேண்டியுள்ளதாக அவர் கூறினார்.

மேலும் சில மின்னுற்பத்தி நிலையங்களில் எரிபொருள் தீர்ந்துவிடும் நிலைமை இருப்பதாக பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

அதற்கமைய, சுமார் 600 மெகாவோட் மின்சாரம் தேசிய கட்டமைப்பில் இழக்கப்படும் என்பதால், மின்வெட்டை அமுல்படுத்துவதற்கான அவசியம் ஏற்பட்டதாக அவர் கூறினார்.

## ஆவி நுழைந்ததாக...

தனது உடலுக்குள் புகுந்துள்ள உறவினர் ஒருவரின் ஆவியே தனது தாயை கொலை செய்ததாக சந்தேக நபர் அருகில் உள்ளவர்களிடம் சத்தமாக கூச்சலிட்டு கூறியுள்ளார்.

சந்தேக நபரான மகன் இலங்கையின் நாத்தாண்டியா பிரதேசத்தில் உள்ள தேவாலயத்துடன் தொடர்புபட்டு செயற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

பின்னர் சந்தேக நபர் தனது உடலில் பேய் பீடித்துள்ளதாகக் கூறி வீட்டில் விளக்கை ஏற்றி வைத்து பேய்க்கு அஞ்சலி செலுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

நாத்தாண்டியா, முத்துகடுவ பகுதியைச் சேர்ந்த 54 வயதான தமயந்தி ரத்நாயக்க (வயது 54) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மிலான் நகர பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## நிலைபெறுதகு வலுசக்தி...

"சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்துக்கமைய, 2030ஆம் ஆண்டாகும்போது இந்த நாட்டின் மொத்த மின்னுற்பத்தியில் 70 சதவீதத்தை மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி வலுக்களின் மூலம் பெற்றுக்கொள்வதே அரசாங்கத்தின் நோக்கமாக உள்ளது.

அதேபோன்று, நாட்டுக்குள் தற்போது ஏற்பட்டுள்ள மின்சார நெருக்கடிக்கு, மீள்புதுப்பிக்கத்தக்க சக்திவலுப் பயன்பாட்டின் மூலம் குறுகிய காலத்துக்குள் தீர்வு காண்பதற்குள்ள இயலுமை தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டது.

இதேவேளை, புதிதாக ஆரம்பிக்கக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள மீள்புதுப்பிக்கத்தக்க சக்திவலுப் பயன்பாட்டிலான திட்டங்களுக்கு அனுமதி வழங்குவதில் ஏற்பட்டுள்ள தாமதங்கள் தொடர்பில் ஆராய்வதும், இந்த விஜயத்தின் நோக்கமாக அமைந்திருந்தது.

## பயங்கரவாதத் தடைச்...

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்து செய்யுமாறு சர்வதேச மன்னிப்புச் சபை மீண்டும் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

தற்காலிக அடிப்படையில் பயங்கரவாதத் தடைச் சட்டம் நிறைவேற்றப்பட்டு 43 ஆண்டுகள் கடந்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளது.

சிறுபான்மை மக்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், மாற்று கருத்துகளை வெளியிடுவோர் உள்ளிட்டோரை அடக்குமுறைக்கு உட்படுத்தவும் துன்புறுத்தவுமே இந்த சட்டத்தை இலங்கை அரசாங்கம் பயன்படுத்துகின்றது என தெரிவித்துள்ளது.

இந்த சட்டத்தில் திருத்தங்களை செய்வதாக அரசாங்கம் உறுதிமொழி வழங்கியுள்ள போதிலும், உத்தேச திருத்தங்கள் இலங்கையின் அரசியல் சாசனத்துக்கும், சர்வதேச மனித உரிமை சட்டங்களுக்கு அமைவானதாக இல்லை எனவும், இந்த உத்தேச திருத்தங்களினால் மனித உரிமைகளை பாதுகாக்க முடியாது எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே, குறித்த சட்டத்தை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென சர்வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளது.

## அமெரிக்க உதவி...

பங்களாதேஷ் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கு அடுத்த மாதம் விஜயம் செய்யவுள்ளதாக டொனால்ட் லூ நேற்றுமுன்தினம் (வியாழக்கிழமை) ஊடகவியலாளர்கள் குழுவிடம் தெரிவித்தார்.

இலங்கைக்கான தனது விஜயத்தின்போது கவனம் செலுத்தும் பகுதிகளை அவர் குறிப்பிடாத நிலையில், மனித உரிமைகள் மற்றும் இருதரப்பு வர்த்தகம் பட்டியலில் முதலிடம் வகிக்கும் என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே, இலங்கை தொடர்பான அமெரிக்காவின் வெளிவிவகாரக் கொள்கையில் மனித உரிமைகள் முக்கியமானவை என்பதை லூ, கோடிட்டுக் காட்டியிருந்தார்.

இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவராக ஜூலி சுங் கொழும்பில் கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் அவரது விஜயம் இடம்பெறவுள்ளது.

தமிழன் தமிழன் ஜூனியர்
கொழும்பு 01
முதல் 15 வரையிலான
பகுதிகளில் தமிழன்
(தினசரி, வாரஇதழ்),
ஜூனியர் பத்திரிகை
வீடுகளுக்கே விநியோகம்
செய்யப்படும்.
தொடர்பு - சந்திரகுமார்
0777983308

மரண அறிவித்தல்,
நினைவஞ்சலி,
மற்றும் பிறந்தநாள்
விளம்பரங்களை
குறைந்த கட்டணத்தில்
பிரசுரிக்க
வெறும் 1000/=
மட்டுமே...
அழையுங்கள்
0761393805

# பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக நெல்லியடியிலும் கையெழுத்து சேகரிப்பு



(யாழ். நிருபர்)

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கைகள் நேற்று வெள்ளிக்கிழமையும் நேற்று முன்தினம் வியாழக்கிழமையும் யாழ்ப்பாணம் நெல்லியடியில் முன்னெடுக்கப்பட்டன.

இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நெல்லியடி பஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்றுக் காலை 09 மணியளவில் இடம்பெற்ற கையெழுத்துப் போராட்டத்தில் பலர் கலந்துகொண்டு கையெழுத்துகளை பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சைவ மகா சபை உயர்மட்டக் குழுவினர் தமிழ்க் கட்சித் தலைவர்களுடன் சந்திப்பு

(யாழ். நிருபர்)





திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரி, மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய விவகாரங்கள் தொடர்பாக தமிழ் சைவப் பேரவை, சைவ மகா சபை உயர்மட்டக் குழுவினர் யாழ்., வன்னி தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தமிழ்க் கட்சித் தலைவர்கள் ஒரு தொகுதியினருடன் சந்திப்பை மேற்கொண்டிருந்தனர்.

தமிழ்ச் சைவப்பேரவை தலைவர் மேனாள் நீதிபதி இ.வசந்தசேனன், பிரதித் தலைவர் மேனாள் அரச அதிபர் நா.வேதநாயகன், பொதுச் செயலாளர் மருத்துவர் தி.சுதர்மன், பொருளாளர் சிவரூபன் சைவ மகா சபைத் தலைவர் நா.சண்முகரத்தினம், பொதுச் செயலாளர் மருத்துவர் பரா நந்தகுமார் பொருளாளர் அருள் சிவானந்தன் ஆகியோர் உள்ளடங்கிய குழுவினர் பங்கேற்றனர். தமிழ்ச் சைவர்களின் கரிசனைகளையும் பாதிக்கப்பட்ட எம்மவருக்காக குரல் கொடுக்கவும் தீர்வுகளை பெற்றுக் கொடுக்கவும் வலியுறுத்துவதுடன் தமிழர் ஒற்றுமைக்கு பங்கம் ஏற்படாதவகையில் தமிழர் தாய்ச் சமயமான சைவ சமயத்தின் தனித்துவத்துக்கு, புனிதத்துக்கு சகோதர மதங்களால் ஏற்படுத்தப்படும் அநீதிகளை தேவையற்ற திணிப்புகளை நிறுத்துவதற்குரிய அரசியல் ரீதியான செயற்பாடுகளை சகல தளத்திலும் செயற்படுத்த வேண்டும் என கோரிக்கை விடப்பட்டுள்ளது.

தொடர்ந்து ஏனைய நாடாளுமன்ற தமிழ் பிரமுகர்களையும் எதிர்வரும் நாட்களில் சந்திக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## எரிபொருளுக்கு அறவிடப்படும்...

எரிபொருள் விலைகளை அதிகரிக்குமாறும் இல்லையென்றால், எரிபொருளுக்கு அறவிடப்படும் வரிகளை நீக்குமாறும் எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில, நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷவிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று இந்த கோரிக்கையை விடுத்துள்ளதாக கூறியுள்ள அமைச்சர், எவ்வாறாயினும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கோரியுள்ள விலைத் திருத்தங்களை செய்தால், அது வரலாற்றில் மிகப் பெரிய விலை அதிகரிப்பாக இருக்குமெனவும் அவர் குறிப்பிட்டார்.

எரிபொருள் தொடர்பான தற்போதைய நிலைமை தொடர்பில் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியதாவது,

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொடர்ச்சியான நட்டத்தின் காரணமாக செயற்பாடுகளை மேற்கொள்வதில் உள்ள சிரமங்கள் காரணமாகவே இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மாதாந்தம் ரூ. 551 மில்லியன் இழப்பைச் சந்திக்கிறது. மேலும் கடந்த ஆண்டு ரூ.83 பில்லியன் இழப்பைச் சந்தித்தது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நட்டத்தை சந்திக்கும் பட்சத்தில் அரசாங்கம் சலுகைகளை வழங்க வேண்டும் அல்லது எரிபொருள் விலையை அதிகரிக்க வேண்டும்.

இதனை செய்யத் தவறினால் எதிர்காலத்தில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும்.

டொலர் நெருக்கடியால் எரிபொருள் இறக்குமதிக்கான நிதியை விடுவிக்க முடியாதுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் ஜனவரி மாதம் எழுத்து மூலம் எனக்கு அறிவித்தார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மதிப்பீடுகளின் அடிப்படையில் 92 ஒக்டேன் பெற்றோலுக்கு 42 ரூபாவும், 95 ஒக்டேன் பெற்றோலுக்கு 64 ரூபாவும், டீசலுக்கு 17 ரூபாவும், சுப்பர் டீசலுக்கு 39 ரூபாவும் வரி விதிக்கப்படுகிறது. வரிகள் மூலம் நிதி அமைச்சு நாளாந்தம் ரூ.367 மில்லியன் வருமானம் ஈட்டுகிறது.

வரிகள் நீக்கப்பட்டால், நாளாந்த நஷ்டத்தில் ஒரு பகுதியை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஈடுகட்ட முடியும். எனவே பொதுமக்களுக்கு சுமையை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, இந்த முறையில் நஷ்டத்தை ஈடுகட்ட அரசாங்கம் முயற்சிக்கிறது. எரிபொருள் விலையை அதிகரிக்குமாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கோரியுள்ளது. அந்த கோரிக்கைகளை நிதியமைச்சுக்கு அனுப்பி வைத்துள்ளது. இதனால், நுகர்வோரை அவதிக்கு உள்ளாக்கும் வகையிலான விலை அதிகரிப்பை மேற்கொள்ளத் தயாரில்லை - என்றார்.

## சமூக அக்கறையும்...





செய்துவைக்கும் நிகழ்வினை தொடர்ந்து இடம்பெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வெகுசன ஊடக அமைச்சர் டலஸ் அலகப்பெரும உட்பட அதிதிகள் பலரும் கலந்து கொண்ட குறித்த நிகழ்வில் கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர், யாழ். மாவட்ட மக்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் பயனளிக்கும் வகையில் தகவல் வெளியீட்டு பணியகத்தினை ஆரம்பித்து வைத்தமைக்காக வெகுசன ஊடகத்துறை அமைச்சருக்கு நன்றி தெரிவித்தார்.

அத்துடன், இனங்களுக்கிடையிலான நல்லுறவு வளர்க்கப்பட வேண்டும் என்பதிலும் தமிழ் மக்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதிலும் அர்த்தபூர்வமான செயற்பாடுகளை வெளிப்படுத்துகின்ற அமைச்சர் டலஸ் அலகப்பெரும, 2013ஆம் ஆண்டு மாத்தறை மாவட்டத்தில் சேர் பொன்னம்பலம் மாவத்தை என்று வீதிக்கு பெயர் சூட்டியதையும் நினைவுபடுத்தினார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, "கரை காண விரும்பும் கப்பலுக்கு ஒளி காட்டும் கலங்கரை விளக்காக ஊடகங்கள் திகழவேண்டும். நிமிர்ந்தெழ விரும்பும் மக்களுக்கு அறிவூட்டும் கல்வியாக ஊடகங்கள் இருக்க வேண்டும்.

அரசியல் தலைமைகளின் கருத்துகளை மக்களிடம் எடுத்து செல்வதுபோல், மக்களின் ஆழ்மன விருப்பங்களையும் கண்டறிந்து அரசியல் தலைமைகளிடம் சொல்ல வேண்டும்.

எங்கெல்லாம் மக்கள் சகல உரிமைகளும் பெற்று வாழ்கின்றார்களோ, அங்கெல்லாம் ஊடகங்களும் மக்களை வழிநடத்தி சென்றிருக்கின்றன. போரியலின் பக்கம் கவனம் செலுத்திய ஊடகங்கள் போரியலில் வதைபட்ட மக்களின் வாழ்வியலின் மீதும் அதிக கவனம் செலுத்தியிருக்க வேண்டும். துப்பாக்கி முனைகளை விடவும் பேனா முனைகளே வலிமையானவை, ஆகவே ஊடகவியலாளர்களே வலிமை மிக்க போராளிகள், அழிவாயுதங்களை ஏந்திய காலங்கள் முடிந்து விட்டன. இன்று நீங்கள் அறிவாயுதங்களை ஏந்த வேண்டும்.

ஊடகமும் அறிவாயுதங்களில் ஒன்று. தமிழ் மக்களின் உரிமையை நோக்கிய பயணத்தில் 13 ஆவது திருத்தச்சட்டம் நல்லதொரு ஆரம்பம், இதை நாம் ஆரம்பத்தில் இருந்தே வலியுறுத்தி வந்தபோது எமக்கு பக்க பலமாக சகலரும் இருந்திருந்தால் இத்தனை அழிவுகள் இங்கு நடந்திருக்காது, காலம் கடந்தாவது இன்று எமது யதார்த்த வழிமுறைக்கு பலரும் வந்திருப்பதை நான் வரவேற்கின்றேன்.

ஆனாலும், ஏன் எதிர்க்கின்றோம் என்பதை தெரிந்து கொள்ளாமல் சிலர் எதிர்ப்பதும், ஏன் ஆதரிக்கின்றோம் என்பதை தெளிவாக தெரிந்து கொள்ளாமல் ஆதரிப்பதும் விமோசனங்களை ஒரு போதும் தரப்போவதில்லை. இனி நாம் என்ன செய்ய வேண்டும்? எங்கிருந்து தொடங்க வேண்டும்? இவைகள் குறித்த ஆழ்மன உணர்வுகளும் உறுதியும் சகலருக்கு இருக்க வேண்டும். அடுத்து வரும் சந்ததிக்கு நாம் எதைவிட்டு செல்லப்போகின்றோம்? எதை உருவாக்கி கொடுக்கப் போகிறோம்?

இவைகள் குறித்த தொலைதூரப் பார்வையும் சமூக அக்கறையும் ஊடகங்களுக்கும் இருக்க வேண்டும்.

தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் சமூக பொருளாதார மாற்றங்களையே நாம் விரும்புகின்றோம். அதை நோக்கியே உழைத்து வருகின்றோம்" என்று தெரிவித்தார்.

## இந்திய வம்சாவளி...

கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் மனோ கணேசன் எம்.பி. மேலும் கூறியுள்ளதாவது,

இறுதி வடிவம் பெறுகின்ற இந்த ஆவணம், இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி, இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உட்பட அனைத்து கட்சித் தலைவர்கள், தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் உட்பட தமிழக கட்சித் தலைவர்கள், பிரிட்டன், அமெரிக்க, ஐரோப்பிய ஒன்றியம் உட்பட சர்வதேச நாட்டு அரசுகள், சர்வதேச நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு சேர்ப்பிக்கப்படும்.

அத்துடன் இந்த ஆவணம் தேசியரீதியான கலந்துரையாடல்களுக்காக நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் பரந்து வாழும் இந்திய வம்சாவளி மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சிவில் சமூக அமைப்புகளுக்கு வழங்கப்படும். சிவில் சமூக அமைப்புகளுடன் நாம் நடத்த உத்தேசித்துள்ள கலந்துரையாடல்கள், இலங்கை, இந்தியா, பிரிட்டன் மற்றும் சர்வதேச அரசு நிறுவனங்களுடன் நாம் நடத்தும் பேச்சுவார்த்தைகளுக்கு அடிப்படையாக அமையும் என நாம் நம்புகிறோம்.

புதிய அரசியலமைப்பு வரைபை தயாரித்து வரும் தனது உத்தேசத்தை இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது. புதிய அரசியலமைப்பு வரைபு எழுதப்பட்டு வருவதையும் நாமறிவோம். இந்த பின்னணியில் இன்றைய சூழலில் எழுந்துள்ள புதிய நிலைமைகளை கருத்தில்கொண்டு, மலையக மக்கள் தொடர்பாக விரிவுபடுத்தப்பட்ட நிலைப்பாட்டு கோரிக்கைகளை நமது நாட்டு அரசுக்கு அறிவித்து, பேச்சுவார்த்தைகளில் ஈடுபட நாம் உதேசித்துள்ளோம்.

அதேவேளை, இலங்கை அரசுக்கு இந்திய அரசு வழங்கி வரும் உதவிகள் மற்றும் அதன்மூலம் இரு நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள புதிய கருத்து பரிமாற்றங்களையும் நாம் அவதானித்து வருகிறோம். இந்த தொடர்பாடல்கள், பொருளாதார ஒத்துழைப்பு விவகாரங்களுடன் மாத்திரம் மட்டுப்படுவது முறையானதல்ல என நாம் நம்புகின்றோம். 1954 (நேரு-கொத்தலாவல), 1964 (சிறிமா-சாஸ்திரி), 1974 (சிறிமா-இந்திரா) ஆகிய ஆண்டுகளில் இலங்கை இந்திய அரசு தலைவர்கள் மத்தியில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களின்படியும், இந்திய பிரதமர்களுக்கும், இலங்கை ஜனாதிபதிகளான ஜே.ஆர். ஜெயவர்த்தன, ஆர். பிரேமதாச, சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு இடையில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின்படியும், இலங்கையில் வாழ்கின்ற தமிழ் மக்கள், குறிப்பாக இந்திய வம்சாவளி மலையக மக்கள் தொடர்பில் இலங்கை அரசுடன் இந்திய அரசுக்கும் இருக்கின்ற கடப்பாடுகள் நல்லெண்ண அடிப்படையில் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதுவே தமிழ் முற்போக்கு கூட்டணியின் எதிர்பார்ப்பாகும்.

இதுபற்றி தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசுக்கும், தமிழக அரசியல் கட்சிகளுக்கும் தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பையும் தமிழ் முற்போக்கு கூட்டணி நிறைவேற்றும்.

அதேவேளை மலைநாட்டு தோட்டத் தொழிலாளர்களை இலங்கை தீவுக்கு அழைத்து வந்து பெருந்தோட்ட பொருளாதாரத்தை கட்டி எழுப்பி, பயன்பெற்றதன் அடிப்படையில் பிரித்தானிய இராணியின் அரசாங்கத்துக்கும், மலையக மக்கள் தொடர்பில் இருக்கின்ற பெரும் கடப்பாட்டையும் எடுத்துக்கூறி, பேச்சுவார்த்தைகளில் ஈடுபட தமிழ் முற்போக்கு கூட்டணியின் முடிவு செய்துள்ளது.

நாம் முன்வைக்கவுள்ள, இந்திய வம்சாவளி மலையக மக்களின் அபிலாஷைகளை பிரதிபலிக்கும் இந்த அரசியல் ஆவணம், மேற்கண்ட அனைத்து உள்நாட்டு, வெளிநாட்டு நட்புறவு மற்றும் நல்லெண்ண நடவடிக்கைகளுக்கும் அடிப்படையாக அமையும் என நாம் நம்புகிறோம். இது தொடர்பில் நாடெங்கும் வாழும் இந்திய வம்சாவளி மலையக மக்களினதும், அனைத்து சகோதர மக்களினதும் ஒத்துழைப்புகளையும் ஆதரவையும் நாம் கோருகிறோம்.

# போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட இரு பெண்கள் வெவ்வேறு இடங்களில் கைது

## தலையணைக்கு கீழிருந்து 15 இலட்சம் ரூபா பணமும் மீட்பு

பாரியளவில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டுவந்ததாகக் கருதப்படும் பெண்கள் இருவர் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் சேதவத்தை மற்றும் ஹேனமுல்ல ஆகிய பகுதிகளில் நேற்றுமுன்தினம் (17) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் நான்கு இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருளும் 17 இலட்சம் ரூபா பணமும் மீட்கப்பட்டுள்ளன.

வெல்லம்பிட்டியில் போதைப்பொருள் விற்பனைசெய்யப்படுவதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய நேற்றுமுன்தினம் மாலை சேதவத்தை பகுதியில் வீடொன்று முற்றுகையிடப்பட்டுள்ளது. இதன்போது 28 கிராம் ஹெரோயினுடன் பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவருடைய கட்டிலின் தலையணைக்குக் கீழிருந்து 15 இலட்சம் ரூபா பணம் மீட்கப்பட்டுள்ளது. இந்தப் பணம் போதைப்பொருள் வர்த்தகத்தின் ஊடாக ஈட்டப்பட்டதாக இருக்கலாமென பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்தப் பெண் 43 வயதுடையவரெனவும் பொலிஸார் தெரிவித்தனர். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் போதைப்பொருளை வழங்கிய மேலுமொரு பெண் கைதுசெய்யப்பட்டுள்ளார். ஹேனமுல்ல பகுதியில் வைத்து குறித்த பெண் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் அவரிடமிருந்து போதைப்பொருள் விற்பனையின் மூலம் கிடைக்கப்பெற்றதாகக் கருதப்படும் இரண்டு இலட்சம் ரூபா பணமும் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தீவிர விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

# ஐந்து பிரதேச சபைகளில் ஏழு உறுப்பினர்கள் நீக்கம்

## காலியில் ஐ.தே.க. அதிரடி நடவடிக்கை

(நமது விசேட செய்தியாளர்)

காலி மாவட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சியை பிரதிநிதித்துவப்படுத்திய ஏழு உறுப்பினர்களை நீக்குவதற்கு அக்கட்சி தீர்மானித்துள்ளது. அதன்பிரகாரம் ஐந்து பிரதேச சபைகளைச் சேர்ந்த ஏழு உறுப்பினர்கள் ஐக்கிய தேசிய கட்சியின் ஒழுக்காற்றுக் குழுவினால் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளனர்.

இமதுவ பிரதேச சபையில் இருவரும் ஹபராதுவ, கரந்தெனிய பத்தேகம, யக்கலமுல்ல, பெந்தோட்டை ஆகிய பிரதேச சபைகளில் தலா ஒவ்வொருவரும் இவ்வாறு நீக்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து காலி மாவட்ட தேர்தல்கள் தெரிவத்தாட்சி அதிகாரி டபிள்யூ.எச்.ஆர். விஜேகுமாரவுக்கு ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார எழுத்துமூலமாக அறிவித்துள்ளார்.

கடந்த தேர்தலின்போது ஐக்கிய தேசிய கட்சிக்கு ஆதரவாக செயற்படாமல் ஐக்கிய மக்கள் சக்தியின் வெற்றிக்கு இவர்கள் உழைத்ததாக குற்றஞ்சுமத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக ஒழுக்காற்றுக் குழுவின் விசாரணைகளின் பின்னர் இவர்கள் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

# கண்டியிலிருந்து பதுளை புறப்பட்ட சரக்கு ரயில் ரொசல்லையில் தடம்புரள்வு




(க.கிஷாந்தன்)

கண்டியிலிருந்து பதுளையை நோக்கி புறப்பட்ட சரக்கு ரயில் ஒன்று வட்டவளை ரொசல்லை பகுதியில் தடம்புரண்டதில் மலையகத்திற்கான புகையிரத சேவைகள் நேற்று (18) பாதிக்கப்பட்டன.

குறித்த ரயில் நேற்று அதிகாலை கண்டியிருந்து பதுளை நோக்கி புறப்பட்டுள்ளது. இந்த ரயில் கண்டி - பதுளை பிரதான புகையிரத பாதையில் ரொசல்லை புகையிரத நிலையத்திற்கு அருகில் காலை 7.00 மணியளவில் தடம்புரண்டுள்ளது.

இதனால் புகையிரத சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. குறித்த ரயிலில் பதுளை நோக்கி பயணித்த பயணிகளும் சிரமங்களுக்குள்ளாகினர்.

இவ்வாறு ரயில் தடம் புரண்டதன் காரணமாக சமிக்ஞை கட்டுப்பாட்டு தொகுதிக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

குறித்த ரயிலை தண்டவாளங்களில் அமர்த்துவதற்காக நாவலப்பிட்டியிலிருந்து திருத்தக் குழுவினர் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.






யாழில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கக்கோரி நல்லை திருஞானசம்பந்த ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி ஜஸ்டின் பேர்னாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை, தென்னிந்திய திருச்சபையின் யாழ். பேராயர் அதிவணக்கத்திற்குரிய கலாநிதி டானியல் தியாகராஜா, யாழ். மாவட்ட ஜம்மியத்துல் உலமா தலைவர் அல்-ஹச் அப்துல் அஸீஸ் ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

(யாழ் நிருபர்)

# துளிச் செய்திகள்

★ வெலிப்பனையில் மோட்டார்சைக்கிளை மோதி ஆசிரியை கொலைசெய்த சம்பவம் தொடர்பாக ஆஜராகியிருந்த கெப் ரக வாகனத்தின் சாரதி, உண்மையாக அதனைச் செலுத்தவில்லையென விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. அந்த வாகனத்தை செலுத்தியவருக்கு சாரதி அனுமதிப்பத்திரம் இல்லையென தெரிவித்த பொலிஸார் அந்த சந்தேக நபரை கைதுசெய்துள்ளனர்.

★ நாட்டில் சீமெந்து தட்டுப்பாடு நிலவுவதால் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக கட்டட நிர்மாணத் தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர். பல்வேறு இடங்களில் இரண்டாயிரம் ரூபாவுக்கு சீமெந்து விற்கப்படுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

★ குருநாகலில் கடந்த ஆறு நாட்களாக காணாமல்போயிருந்ததாக தேடப்பட்டுவந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நேற்றுமுன்தினம் வீடு திரும்பியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

★ தலாத்து ஓயா பகுதியில் 16 வயது சிறுமியை 30 ஆயிரம் ரூபா பணம் கொடுத்து அழைத்துச்சென்று மதுபானம் வழங்கி பாலியல் குற்றம்புரிந்த நபர் ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

★ அகலவத்தையில் நீண்டகாலமாக போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டுவந்த ஐவரை பொலிஸார் நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளனர்.

# புத்தளம் விபத்தில் இருவருக்கு காயம்

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் தபால் நிலைய சுற்றுவட்டத்தில் நேற்று (18) காலை இடம்பெற்ற வீதி விபத்துச் சம்பவத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

முச்சக்கரவண்டி மீது மோட்டார்சைக்கிளொன்று மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதனால், குறித்த முச்சக்கரவண்டி வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த இருவர் காயமடைந்துள்ளனர்.

இதனையடுத்து, சம்பவ இடத்திற்கு வருகை தந்த புத்தளம் தலைமையக போக்குவரத்துப் பொலிஸார் முதற்கட்ட விசாரணைகளை மேற்கொண்டனர்.

அத்துடன், முச்சக்கரவண்டியின் முன்பகுதி முழுமையாக சேதமடைந்துள்ளதுடன், மோட்டார்சைக்கிளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் புத்தளம் தலைமையக போக்குவரத்துப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



தமிழ் இதழியல் கலாமேதை எஸ்.டி.சிவநாயகத்தின் ஜனன தின நூற்றாண்டு (1921-2021) ஞாபகார்த்த தபால் முத்திரை வெளியீட்டு வைபவம் பௌர்ணமி தினத்தன்று கொழும்பு சாயி மத்திய நிலையத்தில் அதன் பிரதம அறங்காவலர் எஸ்.என்.உதயநாயகத்தின் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் பங்கேற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், வி.இராதாகிருஷ்ணன் ஆகியோர் பிரதி தபால் மா அதிபர் சிசிர குமாரவிடமிருந்து முதல் நாள் தபால் உறையை பெற்றுக்கொண்டதை படத்தில் காணலாம்.



கண்டி, உடபேராதனை - மாவல்லை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் நேற்று (18) வெகு விமர்சையாக நடைபெற்றது. அங்கு 19 வருடங்களின் பின்னர் மகோற்சவம் நடத்தப்பட்டு, தேர் உற்சவமும் நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# முல்லேரியா வைத்தியசாலையின் நோயாளர் விடுதி விமானப்படையினால் புனர்நிர்மாணம் செய்து கையளிப்பு




முல்லேரியா தேசிய மனநல வைத்திய சாலையின் நோயாளர் விடுதி இல. 03 விமானப்படையினால் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு நன்கொடைகளுடன் கடந்த செவ்வாய்க்கிழமை (15) கையளிக்கப்பட்டது

கொழும்பு விமானப்படைத்தளத்தினால் இந்த வைத்தியசாலைக்கான வைத்திய உபகரணங்களும் இதன்போது வழங்கப்பட்டன. இந்த வேலைத்திட்டம் விமானப்படை சேவா வனிதா பிரிவின் தலைவி திருமதி சார்மினி பத்திரனவின் வழிகாட்டலின் கீழ் கொழும்பு விமானப்படைத்தளத்தின் கட்டளை அதிகாரி எயார் வைஸ் மார்ஷல் டில்ஷான் வாசகேவின் மேற்பார்வையின் கீழ் இடம்பெற்றது.

இந்த வைபவம் மத வழிபாடுகள் பிரித் நிகழ்வுடன் ஆரம்பிக்கப்பட்டன. இந்த நிகழ்வில் விமானப்படை அங்கத்தவர்கள் மற்றும் சிவில் ஊழியர்கள், முல்லேரியா வைத்தியசாலை ஊழியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# யாழ். பல்கலை மாணவர்களின் போராட்டம் கைவிடப்பட்டது



(யாழ் நிருபர்)

துணைவேந்தரின் உறுதிமொழியை அடுத்து யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் முன்னெடுத்திருந்த போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் நேற்று முன்தினம் மாணவர்களது போராட்ட இடத்திற்கு சென்று, மாணவர் ஒன்றியம் அமைப்பதாக உறுதிமொழியை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து மாணவர்கள் போராட்டத்தை கைவிட்டு, பல்கலைக்கழகத்தின் நுழைவாயில்களை திறந்துவிட்டு அங்கிருந்து கலைந்து சென்றுள்ளனர்.

அந்தவகையில் நேற்று பிரதான மாணவர் ஒன்றியமும், கலைப்பீட மாணவர் ஒன்றியமும் அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 125 தேசிய பாடசாலைகளுக்கு கல்வி அமைச்சு அனுமதி

நாட்டில் மேலும் 125 பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக தரம் உயர்த்தப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

தேசிய பாடசாலைகள் இல்லாத 125 பிரதேச செயலகங்கள் ஒவ்வொன்றும் தேசிய பாடசாலைகளாக நியமிக்கப்படும் என தேசிய பாடசாலைகளின் பணிப்பாளரான கித்சிறி லியனகம தெரிவித்துள்ளார்.

பல கட்டங்களாக நடைபெறவுள்ள 1,000 தேசிய பாடசாலைகளின் திட்டங்களின் ஒரு பகுதியாக இலங்கையில் 831 பாடசாலைகள் தேசிய பாடசாலை மட்டத்திற்கு உயர்த்தப்படுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் 382 தேசிய பாடசாலைகள் இயங்கிவருவதுடன், மாணவர்களுக்கு சிறந்த கல்வி அனுபவத்தை வழங்குவதே தேசிய பாடசாலைகள் திட்டத்தின் நோக்கம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



டிக்கோயா அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மாசி மக தேர் பவனி நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போது தேர்பவனி இடம்பெறுவதையும் கலந்துகொண்ட பக்தர்களையும் படங்களில் காணலாம்.

தமிழன்
THAMILAN தமிலன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, பெப்ரவரி 19ஆம் திகதி, சனிக்கிழமை

# கவனிக்க வேண்டும் சட்ட மா அதிபர்!

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பான வழக்கில், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோர் அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாதத் தாக்குதலைத் தடுக்க தகவல் கிடைத்தும், நடவடிக்கை எடுக்கத் தவறியதற்காக அவர்கள் மீது குற்றவியல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன .

மூவரடங்கிய மேல்நீதிமன்றில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நாமல் பலல்லே, ஆதித்ய பட்டபெந்திகே மற்றும் மொஹமட் இர்ஷதீன் ஆகிய மூவரடங்கிய கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழுவே இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

சட்ட மா அதிபர் திணைக்களம் வழக்கொன்றை தாக்கல் செய்யும்போது அதனை ஒரு தடவைக்கு இரண்டு தடவைகள் யோசித்து மேற்கொள்ள வேண்டும் என்ற சாரப்பட நீதிமன்றம் நேற்று சட்ட மா அதிபர் திணைக்களத்தின் உச்சந்தலையில் கொட்டி அறிவுரை சொல்லியிருக்கிறது.

800இற்கும் மேற்பட்ட குற்றச்சாட்டுகள் மேற்படி இரு அதிகாரிகள் மீதும் சுமத்தப்பட்டிருந்தன. ஆனால், இவற்றை நீதிமன்று மிக நுணுக்கமாக ஆராய்ந்து இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது. சட்ட மா அதிபர் திணைக்களம் தொடர்பில் அண்மையில் வெளியான விமர்சனங்கள் குறித்து எமது கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது.

இலங்கையில் சட்டத்தின் ஆட்சி தொடர்பில் முக்கியமான கருத்துரை ஒன்றை கொழும்புப் பேராயர் மெல்கம் ரஞ்சித் அண்மையில் பகிரங்கமாக முன்வைத்திருக்கின்றார்.

ஜனநாயக நாட்டில் செழுமையான ஆட்சிக்கு முக்கியமான தூண்கள் மூன்று.

முதலாவது, நிறைவேற்றதிகாரம். அது இலங்கையில் ஜனாதிபதியிடம்; அடுத்தது, சட்டமியற்றும் துறை. அது நாடாளுமன்றத்திடம்; மூன்றாவது, நீதித்துறை. இலங்கையில் சட்டத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட நீதிமன்றங்கள் சட்டத்தின் ஆட்சியை உறுதிசெய்வதில் பங்களிக்கின்றன.

இந்த மூன்று துறைகளும் ஒன்றில் ஒன்று தங்கியிராமலும், தனித்துவமாகவும், சுதந்திரமாகவும், கட்டுப்பாடின்றியும் இயங்க வேண்டும்.

மூன்றும் தனித்துவமாகவும், நேரிய வழியிலும் செயற்படுவதை உறுதிசெய்யும் காவல் நாயாக நான்காவது துறையாக ஊடகத்துறை மிளிர வேண்டும்.

நீதித்துறையின் செயற்பாட்டில் முக்கிய பங்களிப்பு சட்ட மா அதிபருக்குரியது. நீதித்துறையின் தனித்துவத்தையும், சுதந்திரத்தையும், சுயாதீனத்தையும் பேணிப் பாதுகாப்பதில் அவரின் பங்களிப்பே பிரதானமானது. நிறைவேற்றதிகாரத்துக்கும், சட்டமியற்றும் நாடாளுமன்றத்துக்கும் வழிகாட்டியாகவும் அதேநேரம் இந்த இரண்டு துறைகளுக்கும், நீதித்துறைக்குமிடையில் இணைப்புப் பாலமாகவும் செயற்படவேண்டிய அவர், இந்தப் பணியில் பக்கம் சாராதவராகவும், நீதியின் பரிபாலனத்தையும், சட்டத்தின் ஆட்சியையும் நியாயமாக நிலைநிறுத்துவதில் சுயாதீனப் பண்பியல்பைப் பேணுபவராகவும் இருக்க வேண்டும். இந்த விடயத்தில்தான் சந்தேகத்தை வெளிப்படுத்தும் வகையில் பேராயர் மெல்கம் ரஞ்சித் கருத்து வெளியிட்டிருக்கின்றார். தற்போதைய சட்ட மா அதிபரின் செயற்போக்கை அவர் கேள்விக்குள்ளாக்கும் விதத்தில் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

“உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழுவினால் அடையாளம் காணப்பட்டவர்களுக்கு எதிராக வழக்குத் தொடுக்கும் தனது பொறுப்பை விடுத்து, அந்த விவகாரத்தில் குற்றமிழைத்தோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படி வலியுறுத்துவோருக்கு எதிராக வழக்குத் தொடுக்க வழிப்படுத்துகின்றார் சட்ட மா அதிபர்” என்று குற்றம் சுமத்துகின்றார் பேராயர்.

“சட்ட மா அதிபர் பொதுமக்களின் சேவகர். நாட்டுக்கும், மக்களுக்கும், சமூகத்துக்கும் நீதியானவற்றைச் செய்வதுதான் அவரது பணியே தவிர, அரசியல்வாதிகளின் விருப்பு, வெறுப்புகளை நிறைவேற்றுவதல்ல” என்றும் பேராயர் சுட்டிக்காட்டுகின்றார்.

ஆட்சியாளர்கள் எதேச்சாதிகாரப் போக்கில் நகரும் இச்சமயத்தில், இருபதாவது அரசியலமைப்புத் திருத்தத்தின்கீழ் தமக்கு கிடைத்த அளப்பரிய அதிகாரங்களை வைத்துக்கொண்டு, நிறைவேற்றதிகார ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ, தமது விருப்புக்குரியவராக இப்பதவிக்குத் தேர்ந்தெடுத்த சட்ட மா அதிபரே இப்போது பதவியிலிருக்கின்றார்.

தாம் சுயாதீனமாக, சுதந்திரமாக செயற்படுகின்றமை மட்டுமல்லாமல், தாம் அப்படிச் செயற்படுவதாக மக்கள் நம்பக்கூடிய விதத்திலும் நடந்துகொள்ள வேண்டியது சட்ட மா அதிபரினதும் கடமையாகின்றது.

சரியோ, பிழையோ அவரும் ஒரு தமிழர். இதற்கு முன்னர் இதே பதவியை வகித்த தமிழரான ஜனாதிபதி சட்டத்தரணி கமலசபேசன், திருகோணமலை மண்ணிலிருந்து வந்தவர். இப்போதைய சட்ட மா அதிபர் சஞ்சேய் இராஜரட்ணமும் அதே மண்ணைச் சேர்ந்தவர்தான்.

சட்ட மா அதிபர் என்ற பொறுப்பில் கமலசபேசன் நிலைநிறுத்திய கீர்த்தி, தனித்துவம், சிறப்பு, பெருமை போன்றவற்றைத் தனக்குரிய வழிகாட்டல்களாக இவர் கொள்வாராயின், சர்ச்சைகளுக்கு அப்பாற்பட்டவராக வரமுடியும். அரசியல் தலைமைகளின் ஏவல்களிலிருந்து அவர் விடுபட்டால் மாத்திரமே அதற்கு சாத்தியமுண்டு.

நேற்றைய நாளில் நீதிமன்றம் கூறிய அறிவுரையினையும் சட்ட மா அதிபர் கவனத்திற்கொள்ள வேண்டும்.




# தீக்ஷனவை திட்டுவதால் தீர்வு கிட்டிவிடுமா?

•க.கமல்

“தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா” என்று திமிராக சொல்லும் அளவிற்கு வலுவான வரலாறு தமிழர்களாகிய நமக்கு உள்ளது. அப்படி தமிழர்கள் உலக நாடுகள் பலவற்றிலும் தமக்குரிய தனித்துவமான பாரம்பரியங்களை பாதுகாத்துக்கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

அந்த வரிசையில் இலங்கைத் தமிழர்களுக்கு ஒரு தனிச்சிறப்பு உள்ளது. இலங்கைக்குள் தனித்துவமான பாரம்பரியம் கொண்டவர்களாக வாழ்ந்து வருகின்றனர். இங்கு வடக்கு, கிழக்கு மாகாணத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள் என்ற இரு வரையறைகளில் இருவேறு நிலப்பரப்புகளில் வாழ்ந்தாலும் தமிழர்கள் எனும்போது இந்நாட்டில் பிறந்த தமிழர்கள் அனைவரும் இலங்கைத் தமிழர்கள் என்ற அங்கீகாரத்தைக் கொண்டுள்ளனர்.

இது ஒருபுறமிருக்க, இலங்கைக்குள் பெரும்பான்மை இனமாக வாழும் சிங்கள மக்களுக்கும், தமிழ் மக்களுக்கும் இடையில் ஏற்பட்ட இனம் சார்ந்த பிரச்சினைகளை அடிப்படையாகக்கொண்ட சிவில் யுத்தமொன்று மூன்று தசாப்தங்களாக நிகழ்ந்தமையினால் இலங்கைத் தமிழர்கள் சர்வதேச கண்ணோட்டத்திற்குள் ஆட்பட்டனர்.

யுத்தம் முடிவடைந்து பத்தாண்டுகள் ஓடி முடிந்திருந்தாலும், அதன் வடுக்களும், அதனால் ஏற்பட்ட பிரச்சினைகளும் இன்றும் தமிழ் மக்களைத் துரத்திப் பிடித்தவாறுதான் உள்ளன.

அதேநேரம், அந்தப் பிரச்சினைகளையும் தங்களுக்கு சாதகமாக மாற்றிக்கொண்டு இரு தரப்பு மக்களையும் தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்க வேண்டும் என்ற குறுகிய எண்ணம் படைத்தோரும் தங்களது பங்கை சரியாக செய்தவாறே இருக்கின்றனர்.

இவ்வாறான குழுக்கள் நம் மீது அடக்குமுறைகளைப் பிரயோகிப்பவர்களை விடவும் ஆபத்தானவர்கள் என்பதுதான் இன்றைய சூழலில் நாம் அறிந்துகொள்ள வேண்டிய பாடமாக இருக்கிறது.

மேற்கூறியதைபோன்ற குழுக்கள் எந்த அளவிற்கு ஆபத்தானவர்கள் என்பதை அண்மையில் இந்தியாவில் நடைபெறவுள்ள ஐ.பி.எல். போட்டிகளில் விளையாடவுள்ள வீரர்களை ஏலத்தில் எடுப்பதற்கான நிகழ்வு நமக்கு உணர்த்தியுள்ளது.

குறிப்பாக ஐ.பி.எல். போட்டிகள் இந்தியாவின் மாநிலங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அணிகளை கட்டமைத்துள்ளதோடு, பல நாடுகளினதும் கிரிக்கெட் அணிகள் பிரகாசிக்கும் கிரிக்கெட் வீரர்களைக்கொண்டு இந்தப் போட்டிகள் நடத்தப்பட்டு வருவதால் ஐ.பி.எல். போட்டிகள் உலகளவில் ரசிகர்களைக் கொண்டுள்ளன.

இந்தப் போட்டிகளில் தமிழ்நாட்டை பிரதிநிதித்துவம் செய்து விளையாடிவரும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி நான்கு தடவைகள் ஐ.பி.எல். கிண்ணத்தை வென்று உலக வாழ் கிரிக்கெட் ரசிகர்கள் மனதில் சிறப்பான இடத்தைப் பிடித்துள்ளது.

இந்நிலையிலேயே இவ்வருடத்திற்கான ஐ.பி.எல். போட்டித் தொடரில் விளையாட அந்த அணி தயாராகி வருவதோடு, அதற்காக வீரர்களை ஏலம் எடுக்கும் நிகழ்வில் கலந்துகொண்ட அந்த அணியின் நிர்வாகிகள் அணியின் வெற்றிக்கு கடந்த ஆண்டுகளில் முக்கிய துருப்புச்சீட்டாக விளங்கிய டுப் பிளெஸிஸ், சுரேஷ் ரெய்னா போன்ற வீரர்களை ஏலத்தில் எடுக்கத் தவறிவிட்டனர்.

இந்நிகழ்வு சென்னை அணியின் நிர்வாகிகள் மீது ரசிகர்களுக்கு பெரும் கோபத்தை ஏற்படுத்துவதாக அமைந்திருந்தது. அதனால் “சென்னை அணியை வெறுப்போம்” #Boycottchennaisuperkings என்ற Hastag உடனான பதிவுகள் ட்விட்டர் தளத்தில் வெகுவாகப் பரவியிருந்தன.

இந்த சிக்கலான தருணத்தையும், சென்னை அணி மீது ரசிகர்கள் கொண்டுள்ள வேட்கையினையும் சூட்சுமமான தந்திரோபாயங்களூடாக தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்ட சிலர், சென்னை அணி மீது ரசிகர்கள்கொண்ட வெறுப்புணர்வுக்கு மகேஷ் தீக்‌ஷன என்ற வீரர் உள்வாங்கப்பட்டதே காரணம் என்று போலி பிரசாரத்தைப் பயன்படுத்தி சென்னை அணி மீதான வீணான வெறுப்பொன்றை ஏற்படுத்தினர்.

இந்த போலி பிரசாரத்தின் அடுத்த விளைவாக இலங்கையிலுள்ள சில இனவாத ஊடகங்கள் தங்கள் பங்குக்கு “தீக்‌ஷனவை சென்னை அணி ஏலத்தில் எடுத்ததால் தமிழ்நாட்டவர்கள் குழப்பத்தில்” என்ற தலைப்பில் செய்தி வெளியிட்டிருந்தன. இதனால் தமிழர்களின் காவலர் என தங்களை அடையாளம் காட்டிக்கொள்ளும் புலம்பெயர் அமைப்புகளின் இணையத்தளங்கள் என்ன பலன்களை எதிர்பார்க்கின்றன என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

மறுபுறத்தில் இவ்வாறான போலி பிரசாரங்களால் தமிழர்களுக்குக் கிடைக்கப்போகும் பலன் என்னவென சிந்திக்கவேண்டிய அவசியம் எழுந்திருக்கும் அதேவேளை, தமிழர்கள் மீதான நன்மதிப்பைக் குறைக்கும் விதமாக மட்டுமே இவ்வாறான சில்லறைத்தனமாக செயற்பாடுகள் அமைந்துள்ளன என்பதையும் மேற்படி குழுக்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

மறுதிசையில் தமிழ் மக்களும் மேற்படி விஷமத்தனமான பிரசாரங்களையும், வெறுப்பு பேச்சுகளையும் நம்பி ஏமாற்றமடைந்துவிடாமல் சிறந்த பகுப்பறிவுச் சிந்தனையுடன் செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

மேலும், மகேஷ் தீக்‌ஷன இலங்கை இராணுவத்தின் வீரர். அதனால் அவரை வெறுக்கவேண்டுமென வெறுப்புப் பேச்சு பேசுவோர், தீக்‌ஷன எந்த ஆண்டில் இராணுவ சேவையில் இணைந்துகொண்டார், யுத்த காலத்தில் இலங்கை இராணுவத்திற்கு அவர் வழங்கிய பங்களிப்பு என்ன போன்றவற்றை ஆராய்ந்த பின்னர்தானே இவ்வாறான செய்திகளை வெளியிட்டிருக்க வேண்டும்? அவ்வாறில்லாமல் ஒரு பக்கத்தை மட்டுமே சார்ந்ததான வெறுப்புணர்வுகளை அடிப்படையாகக்கொண்ட போலி பிரசாரங்களால் தமிழ் மக்களுக்கு எவ்வண்ணமான நலன்களும் கிடைக்காதல்லவா? எனவே, சென்னை அணிக்கும், தமிழருக்குமான நேசம் என்றும் தொடரும் என்பதைக் காண்பிக்கவும், போலி பிரசாரங்களைக் கண்டு ஏமாறாத பகுத்தறிவுச் சிந்தனை தமிழருக்கு என்றும் உண்டு என்பதை வெளிப்படுத்த தகுந்த சந்தர்ப்பமாகவும் நாம் இதனைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.





## இன்றைய நாளில்...

- 1815 – கண்டியின் கடைசி மன்னர் விக்கிரம ராஜசிங்கன் பிரித்தானியரால் தும்பர என்ற இடத்தில் கைதுசெய்யப்பட்டார்.
- 1876 – யாழ்ப்பாணம் கத்தோலிக்க கார்டியன் ஆங்கில இதழ் வெளியிடப்பட்டது.
- 1878 – கிராமபோனிற்கான காப்புரிமத்தை தோமஸ் அல்வா எடிசன் பெற்றார்.
- 1985 – வில்லியம் சுரோடர் என்பவர் செயற்கை இதயம் வெற்றிகரமாகப் பொருத்தப்பட்டு மருத்துவமனையிலிருந்து வெளியேறிய முதல் நபரானார்.
- 1986 – அம்பாறையின் உடும்பன்குளத்தில் 80 தமிழ் விவசாயிகள் இலங்கை இராணுவத்தினரால் சித்திரவதை செய்து கொலைசெய்யப்பட்டனர்.
- 2002 – நாசாவின் மார்ஸ் ஒடிசி விண்ணுலவி, செவ்வாய்க்கோளின் மேற்பரப்பை வெப்ப உமிழ்வு முறை மூலம் வரைய ஆரம்பித்தது.

## நக்கல் நமசிவாயம்

இருளிலிருந்து வெளிச்சத்துக்கு வருவோம் எண்டு போன தீபாவளிக்கு வாழ்த்துச் சொன்னாங்கள்...! இப்போ என்னடாவெண்டா கரண்ட் வெட்டி இருட்டுக்குள்ள தள்ளுறாங்கள்...! இவங்கள புரிஞ்சுகொள்ள முடியேல்லையடி...!!!



# புத்தளத்தில் தொடர்ச்சியாக நான்காவது நாளாகவும் டீசலுக்கு கடும் தட்டுப்பாடு



(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் மாவட்டத்தில் நேற்று (18) நான்காவது நாளாகவும் டீசலுக்கு தட்டுப்பாடு நிலவி வந்தது. நாட்டில் கொரோனா பரவல் ஏற்படத் தொடங்கியதற்கு பின்னர் பெற்றோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு என்பனவற்றின் விலை அதிகரித்துவருகிறது.

இந்நிலையில், புத்தளம், சிலாபம், கற்பிட்டி உள்ளிட்ட பல பகுதிகளில் டீசலுக்கு தட்டுப்பாடு நிலவி வருவதுடன், தனியார் மற்றும் அரச எரிபொருள் நிரப்பு நிலையங்களில் "டீசல் இல்லை" என்ற பதாகைகள் தொங்கவிடப் பட்டிருப்பதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

புத்தளம் நகரில் மாத்திரம் ஐந்து எரிபொருள் நிரப்பு நிலையங்கள் உள்ளபோதிலும் ஒரேயொரு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மட்டும் டீசல் விநியோகம் செய்யப்படுகிறது. இதனால், நீண்ட வரிசையில் வாகனங்கள் தரித்து நிற்பதை அவதானிக்க முடிகின்றது.

ஒருசில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் சுப்பர் டீசல் மாத்திரமே இருப்பதாக எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு டீசலுக்கு தட்டுப்பாடு நிலவி வருவதனால், பெரும்பாலான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசையில் நின்று பெற்றோல் கொள்வனவு செய்வதனையும் அவதானிக்க முடிகின்றது.

அத்துடன், பெற்றோலின் விற்பனையும் அதிகரித்துக் காணப்படுவதாக எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

டீசலுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், பெற்றோலுக்கும் மண்ணெண்ணெய்க்கும் இவ்வாறு தட்டுப்பாடு ஏற்படலாம் என அஞ்சி எரிபொருளை சேமித்து வைப்பதாக மக்கள் கூறுகின்றனர்.

அண்மையில் லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் தமது எரிபொருட்களின் விலைகளை அதிகரித்தபோதிலும், தாம் விலை அதிகரிப்பை மேற்கொள்ளப்போவதில்லை என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ள நிலையில், இவ்வாறு டீசலுக்கு தட்டுப்பாடு நிலவி வருகின்றமை விலை அதிகரிப்புக்கான அறிகுறிகளாக இருக்கலாம் என பொதுமக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

## 18.02.2022 நாணய மாற்று வீதம்

ஸ்ரீ லங்கா மஹ பெங்குவ
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 030 2 5 | 036 15 2 |
| கனேடியன் டொலர் | 044 0743 | 050 340 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 20 611 | 21 2246 |
| யூரோ | 114 3 03 | 123 86 2 |
| ஜப்பான் யென் | 0 6025 | 0 6665 |
| சிங்கப்பூர் டொலர் | 036 2813 | 041 0308 |
| ஸ்ரேலிங் பவுன் | 157 7601 | 166 2388 |
| சுவிஸ் பிரான்ங் | 103 1 38 | 110 6753 |
| ஐ.அ.டொலர் | 087 4 7 | 1 1 8881 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 425 508 |
| குவைட் | குவைட் தினார் | 557 2556 |
| ஓமான் | ஓமான் றியால் | 413 8538 |
| கட்டார் | கட்டார் றியால் | 44 1483 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 42 7515 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 44 151 |

# பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு எதிராக சாவகச்சேரியில் கையெழுத்துப் போராட்டம்









(சாவகச்சேரி நிருபர்)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரிய கையெழுத்துப் போராட்டம் நேற்று முன்தினம் (17) வியாழக்கிழமை பிற்பகல் சாவகச்சேரி நகரில் முன்னெடுக்கப்பட்டது. இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியினரால் முன்னெடுக்கப்பட்ட கையெழுத்துப் போராட்டத்தில் சாவகச்சேரி தொகுதி தமிழரசுக் கட்சிக் கிளை செயலாளர் ச.தங்கராசா கையெழுத்திட்டு போராட்டத்தை ஆரம்பித்து வைத்திருந்தார்.

இலங்கையில் இருக்கும் சட்டங்களில் மிக மோசமான - கொடூரமான சட்டமான பயங்கரவாதத் தடைச்சட்டம் தற்போது அரசியல் பழிவாங்கல்கள், அரசியல்வாதிகளின் தனிப்பட்ட விரோதிகளுக்கு எதிராக பயன்படுத்தப்படும் நிலை காணப்படுகின்றது. இப்படியான ஒரு சட்டம் நாட்டில் இருக்கக்கூடாது.

நீங்கள் இடும் ஒவ்வொரு கையெழுத்தும் உங்கள் சகோதர-சகோதரியை கொடூரமான இந்தச் சட்டத்திற்கு இரையாகாமல் இருப்பதிலிருந்து பாதுகாக்கும் – என நிகழ்வில் கலந்துகொண்ட முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன் வலியுறுத்தியிருந்தார்.

மேலும் இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி இ.சிவமங்கை, சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.%

நகர வர்த்தகர்கள், பொதுமக்கள் பலரும் ஆர்வமாக குறித்த தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்திட்டிருந்தனர்.

## கினிகத்தேனையில் வேன் விபத்து

# மூவர் காயமடைந்து வைத்தியசாலையில்




(தலவாக்கலை செய்தியாளர்)

ஹட்டன் - அவிசாவளை வீதியில் கினிகத்தேனை ரஞ்சுலாவ பகுதியில் நேற்று முன் தினம் (17) இரவு வேன் ஒன்று வீதியை விட்டு விலகி மண்மேட்டில் மோதி விபத்துக்குள்ளானதில் மூவர் காயமடைந்துள்ளதாக கினிகத்தேனை பொலிஸார் தெரிவித்தனர். இதன்போது காயமடைந்த மூவரும் நாவலப்பிட்டி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவரின் கால் மற்றும் கை எலும்பு முறிந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கராப்பிட்டியவிலிருந்து தலவாக்கலை நகருக்கு வந்த வேன் மீண்டும் தலவாக்கலையிலிருந்து கராப்பிட்டியவுக்கு திரும்பி சென்று கொண்டிருந்தபோது கினிகத்தேனை ரஞ்சுலாவ பகுதியில் வேன் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கினிகத்தேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஐந்து சட்டமூலங்களை சபாநாயகர் சான்றுரைப்பு



நாடாளுமன்றத்தில் அண்மையில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட 5 சட்டமூலங்களை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று முன்தினம் (17) சான்றுரைப்படுத்தினார்.

அதற்கமைய, கடந்த 09 மற்றும் 10 ஆகிய இரு தினங்களிலும் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம், ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடிகளைத் தடைசெய்தல் சட்டமூலம், நீதித்துறை (திருத்தச்) சட்டமூலம், குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம், மாகாண சபைகள் (முத்திரைத் தீர்வையைக் கைமாற்றுதல்) (திருத்தச்) சட்டமூலம் என்பவற்றை இவ்வாறு சபாநாயகர் சான்றுரைப்படுத்தினார்.

அதன்படி, 2022ஆம் ஆண்டு 02ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம், 2022ஆம் ஆண்டு 03ஆம் இலக்க ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடிகளைத் தடைசெய்தல் சட்டம், 2022ஆம் ஆண்டு 04ஆம் இலக்க நீதித்துறை (திருத்தச்) சட்டம், 2022 ஆம் ஆண்டு 05 ஆம் இலக்க குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் மற்றும் 2022ஆம் ஆண்டு 04ஆம் இலக்க மாகாண சபைகள் (முத்திரைத் தீர்வையைக் கைமாற்றுதல்) (திருத்தச்) சட்டம் ஆகிய சட்டங்கள் நேற்று முன்தினம் (17) முதல் நடைமுறைக்கு வந்துள்ளன.

## அகில எல்லாவல எம்.பிக்கு கொரோனா தொற்று

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அகில எல்லாவல கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளார்.

இதனையடுத்து, அவர் தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அவருடன் நெருங்கிய தொடர்பை பேணியவர்களை கண்டறியும் நடவடிக்கையில் சுகாதாரப் பிரிவினர் ஈடுபட்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

# அகழ்வு இடங்கள் புனரமைப்பது குறித்த ஆய்வறிக்கை சுற்றாடல் அமைச்சரிடம் கையளிப்பு

இலங்கையின் அகழ்வு இடங்கள் புனரமைப்பது குறித்து தயாரிக்கப்பட்ட ஆய்வறிக்கை சுற்றாடல் அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஜி.எஸ்.எம்.பி. நிறுவனமே குறித்த ஆய்வறிக்கையை தயாரித்துள்ளது.

நாடுபூராகவும் உள்ள அகழ்வு இடங்களை முறையாக புனரமைக்காமை குறித்து தமக்கு ஒரு வாரத்திற்குள் ஆய்வறிக்கையை பெற்றுத் தருமாறு சுற்றாடல் அமைச்சர் மகிந்த அமரவீர புவிச்சரிதவியல் மற்றும் அகழ்வுப் பணியகத்தின் தலைவருக்கு அறிவித்திருந்தார். இதற்கமைய அகழ்வு மற்றும் புனரமைப்பு இடங்கள் குறித்த அறிக்கை தயாரிக்கப்பட்டு அமைச்சரிடம் வழங்கப்பட்டது. இவ்வறிக்கைக்கமைய 2012ஆம் ஆண்டுமுதல் 2021ஆம் ஆண்டுவரையிலான காலப்பகுதியில் புனரமைக்கப்படாத 950 அகழ்வு இடங்கள் இனங்காணப்பட்டதுடன், தற்போது புனரமைக்கப்பட்டுள்ள 2491 அகழ்வு இடங்கள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அகழ்வு நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப் பட்டதையடுத்து குறித்த இடங்கள் உரிய முறையில் புனரமைக்காத நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் அவ்வாறான நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்கு மீண்டும் அனுமதிப்பத்திரங்களை வழங்காதிருக்கவும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

# சிறுவர்களின் வாசிப்புத் திறனை ஊக்குவிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நுவரெலியாவில்







(செ.திவாகரன்)

நுவரெலியா கல்வி வலயத்திலுள்ள சிங்கள, தமிழ் ஆரம்பப் பாடசாலைகள் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சிறுவயதிலிருந்தே புத்தகங்களை வாசிக்கவும் பயன்படுத்தவும் கற்றுக்கொடுக்கும் செயலமர்வில் கலந்துகொண்ட 49 ஆசிரியர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நுவரெலியா அல்பைன் ஹோட்டலில் இடம்பெற்றது

நுவரெலியா வலயக்கல்வி அலுவலகம் மற்றும் நுவரெலியா ஒருங்கிணைந்த முன்பள்ளி ஆசிரியர் சங்கம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் நுவரெலியா மனித உரிமைகள் பாதுகாப்பு அமைப்பினர் இதனை ஏற்பாடு செய்திருந்தனர். இந்நிகழ்வின்போது இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் எம்.என்.எம்.மினாஸ் "பெற்ற அறிவைக் கொண்டு புயலில் நல்வாழ்வு" என்ற தனது அறிமுக நூலையும் வழங்கினார்.



சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிபெயர்ப்புகளுடன் ஏறத்தாழ 1,500 படைப்புகளை எழுதிய மூத்த எழுத்தாளரும் எழுத்து ஆலோசகருமான சாமுத்திரிகா டி சில்வா இந்நிகழ்வுக்கு வளங்களை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை புத்தக வெளியீட்டாளர்கள் சங்கத்தின் உப தலைவர் பத்மசிறி டி சில்வா, மனித உரிமைகள் பாதுகாவலர் சங்கத்தின் தேசிய உப தலைவர், கலாநிதி எவ்.எம்.ஷெரிக், நுவரெலியா மாவட்ட கிளையின் பணிப்பாளர் ஜே.எம்.நளீர் மற்றும் அனைத்து மதத் தலைவர்கள், விசேட அதிதிகள் உட்பட சுமார் 70 ஆசிரியர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.



# மன்னாரில் மேலும் 23 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

மன்னார் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் மேலும் 23 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், கடந்த 17 நாட்களில் 400 பேர் கொரோனா தொற்றுக்குள்ளானதாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று (18) அவர் விடுத்துள்ள கொரோனா நிலவர அறிக்கையில் இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மன்னார் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் (17) புதிதாக 23 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி வரை 400 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வருடம் 601 நோயாளர்களும் மாவட்டத்தில் தற்போது வரை 03ஆயிரத்து 784 கொரோனா தொற்றுக்குள்ளானோரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்டோரில் 39 கொரோனா மரணங்களும் நிகழ்ந்துள்ளதென குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வவுனியா பொலிஸாரால் 20 வயது இளைஞன் கைது

(வவுனியா நிருபர்)

வவுனியா, சகாயமாதாபுரம் பகுதியைச் சேர்ந்த 20 வயது இளைஞன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, குருமன்காடு நகரசபை விடுதியிலுள்ள வீடொன்றிலிருந்து அண்மையில் 03 பவுண் நகை திருடப்பட்டிருந்தது. அத்துடன், வைரவபுளியங்குளம் பகுதியிலுள்ள வீடு ஒன்றிலும் 02 பவுண் நகை திருடப்பட்டிருந்தது.

வீடு புகுந்து இடம்பெற்ற இத்திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. குறித்த முறைப்பாடு தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஐ.ஏ.ஏ.எஸ்.ஜயக்கொடியின் வழிகாட்டலில், உப பொலிஸ் பரிசோதகர் கியான் தலைமையில் பொலிஸ் சார்ஜன்ட்டுகளான திசாநாயக்க, திலீப், விக்கிரமசூரிய, பொலிஸ் கான்ஸ்டபிள் தயாளன் உள்ளடங்கிய குழுவினர் துரித விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதனடிப்படையில் குறித்த இரு திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் வவுனியா, சகாயமாதாபுரம் பகுதியைச் சேர்ந்த 20 வயது இளைஞன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், குறித்த இளைஞரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் திருடப்பட்ட நகைகள் மீட்கப்பட்டுள்ளதாகவும், மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# அரசாங்க வெளியீட்டுப் பணியகம் யாழில் திறந்துவைப்பு




(யாழ். நிருபர்)

அரசாங்க தகவல் திணைக்களத்தின் அரசாங்க வெளியீட்டுப் பணியகம் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்றுக் காலை 10 மணியளவில் வெகுசன ஊடக அமைச்சர் டலஸ் அலகப்பெருமவினால் திறந்துவைக்கப்பட்டது.

அரசாங்க வெளியீட்டுப் பணியகத்தின் ஏழாவது மாவட்ட அலுவலகமாக இவ்வலுவலகம் யாழ்ப்பாணத்தில் அமைவதுடன் இதற்கு முன்னர் கண்டி, காலி, அநுராதபுரம், வவுனியா, பதுளை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் இப்பணியகம் ஏற்கனவே திறந்துவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அரசாங்கத்தினால் வெளியிடப்படும் வெளியீடுகளை வார நாட்களில் இங்கு விலைக்கு பெற்றுக்கொள்ள முடியும்.



இந்நிகழ்வில் அரசாங்க தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் மொஹான் சமரநாயக்க, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன், சுரேன் ராகவன் ஆகியோரும் வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், அரசாங்க தகவல் திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# வவுனியா பொது வைத்தியசாலையின் புதிய பணிப்பாளராக நிலக்ஸன் நியமனம்

(வவுனியா நிருபர்)


வவுனியா பொது வைத்தியசாலையின் புதிய பணிப்பாளராக வைத்தியர் ஜே.எம்.நிலக்ஸன் மத்திய சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

வைத்தியசாலையின் முன்னாள் பணிப்பாளர் ராகுலன் மேல் படிப்புக்காக சென்றநிலையில், வைத்தியசாலையில் நிலவும் பணிப்பாளர் வெற்றிடத்துக்கு வவுனியா மாவட்ட பிரதி சுகாதாரப் பணிப்பாளராக கடமையாற்றிய வைத்தியர் ஜே.எம்.நிலக்ஸன் நியமிக்கப்பட்டுள்ளார்.



இவர், கொவிட் வவுனியா மாவட்டத்தினை அச்சுறுத்திக்கொண்டிருந்த காலப்பகுதியில் அதனை கட்டுப்படுத்துவதற்காக தடுப்பூசிகள் வழங்கல், சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் சுகாதார பரிசோதகர்களுடன் இணைந்து மாவட்டத்தில் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தல் உள்ளிட்ட சேவைகள் மூலம் மாவட்டத்தில் கொவிட்டை கட்டுப்படுத்த சிறப்பாக செயற்பட்டு வைத்தியர்கள் மற்றும் மக்கள் மத்தியில் நன்மதிப்பையும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அவுஸ்திரேலிய பாதுகாப்புத் திணைக்களத்தின் உதவி செயலர் பாதுகாப்பு செயலருடன் சந்திப்பு



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அவுஸ்திரேலிய பாதுகாப்புத் திணைக்களத்தின் உலக விவகாரப் பிரிவின் உதவி செயலாளர் டொம் மெனடு, பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்னவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

ஸ்ரீஜயவர்தனபுர கோட்டேயிலுள்ள் பாதுகாப்பு அமைச்சு தலைமையகத்தில் நேற்று முன்தினம் (17) இந்த சந்திப்பு இடம்பெற்றது.




பாதுகாப்பு அமைச்சுக்கு வருகை தந்த இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் டேவிட் ஹொலி தலைமையிலான அவுஸ்திரேலிய தூதுக் குழுவினரை பாதுகாப்புச் செயலாளர் வரவேற்றார்.

இந்து சமுத்திர பிராந்தியத்தில் இலங்கையின் கேந்திர முக்கியத்துவம், பிராந்திய பாதுகாப்பு மற்றும் இரு நாடுகளுக்கு இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு உட்பட பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பாக இந்த சந்திப்பின்போது விரிவாக கலந்துரையாடப்பட்டன.

இந்த சந்திப்பின் நினைவாக அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் தலைமையிலான குழுவினருக்கு பாதுகாப்புச் செயலாளர் நினைவுச் சின்னங்களை வழங்கி வைத்தார்.

கொவிட்-19 பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான சுகாதார நடைமுறைகளுக்கமைய இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்த சந்திப்பின்போது பாதுகாப்பு அமைச்சின் இராணுவ இணைப்பு அதிகாரி மேஜர் ஜெனரல் தினேஷ் நாணயக்கார, அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகராலயத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கெப்டன் இயன் கேன் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# யாழ். மாநகர சபையின் திண்மக்கழிவகற்றல் தொடர்பில் கலந்துரையாடல்



(யாழ். நிருபர்)


யாழ். மாநகர சபையின் திண்மக்கழிவகற்றலில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்திசெய்தல் மற்றும் யாழ். மாநகர சபையில் புதிதாக நியமனம் பெற்றுள்ள வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் இணைத்து அதனை மேம்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் கடந்த இரண்டு நாட்களாக யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நேற்று முன்தினம் (17) நடைபெற்ற இக்கலந்துரையாடலில் யாழ். மாநகர சபையின் உறுப்பினர்கள், யாழ். மாநகர சபை செயலாளர் மற்றும் வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரட்டு மைய சிரேஷ்ட மேற்பார்வையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

யாழ். மாநகர சபையின் வட்டாரங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற உறுப்பினர்களுக்கு புதிதாக நியமனம் பெற்றுள்ள தங்களுடைய வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர்களை அறிமுகம் செய்யும் ஒரு கலந்துரையாடலாகவும் இது இடம்பெற்றது.

அத்துடன், யாழ். மாநகரத்தில் கடந்த 15 நாட்கள் நடைபெற்ற திண்மக்கழிவகற்றல் தொடர்பாக ஆய்வுசெய்யப்பட்டு அதில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்திசெய்வது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

# மிருசுவிலில் மோட்டார் சைக்கிளுடன் வேன் மோதி ஒருவர் படுகாயம்



(சாவகச்சேரி நிருபர்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிருசுவில் படை முகாம் முன்பாக ஏ-9 வீதியில் நேற்று முன்தினம் (17) வியாழக்கிழமை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

ஏ-9 வீதி ஊடாக சென்ற மோட்டார்சைக்கிள் குறுக்கு வீதி ஒன்றினுள் திரும்ப முற்பட்ட வேளையில், பின்புறமாக வந்த ஹயஸ் வாகனம் மோதி குறித்த விபத்து சம்பவித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

விபத்தில் மோட்டார்சைக்கிளில் சென்ற கொக்குவில் பகுதியைச் சேர்ந்தவர் படுகாயமடைந்த நிலையில், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மௌன்ஜீன் தோட்ட பற்றைக் காட்டுக்கு அடையாளம் தெரியாதோர் தீ வைப்பு

## ஐந்து ஏக்கர் நிலப்பரப்பு எரிந்து நாசம்



(இரா.யோகேசன்)

வட்டவளை மௌன்ஜீன் தோட்டத்தில் மாணிக்கக் கல் அகழ்வு மேற்கொள்ளும் பகுதியின் அருகில் உள்ள பற்றைக் காட்டுக்கு இனந்தெரியாதோரால் வைக்கப்பட்ட தீயினால் சில பகுதிகள் எரிந்து நாசமடைந்துள்ளன.



குறித்த பகுதியில் அண்மைக் காலமாக தீ வைக்கும் சம்பவம் அதிகரித்துள்ளது. அவ்வாறு வைக்கப்பட்ட தீயினால் சுமார் ஐந்து ஏக்கருக்கு மேற்பட்ட பகுதி எரிந்து நாசமடைந்துள்ளது. அப்பகுதியில் தற்போது தேசிய மாணிக்கக்கல் திணைக்களத்தினூடாக அகழ்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தேசிய மாணிக்கக்கல் திணைக்களத்தின் தற்காலிக நிர்வாக நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதோடு அவற்றுக்கான மின்இணைப்பு கூட குறித்த தீ பரவும் பகுதியிலிருந்தே செல்வதையும் அவதானிக்கக் கூடியதாகவிருந்தது.

குறித்த தீப் பரவலால் அப்பகுதியில் காணப்படும் மின் கம்பங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என அப் பகுதியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் வைக்கப்பட்ட தீயினால் பற்றைக்காட்டில் வாழும் உயிரினங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று கவலை தெரிவிப்பதோடு தற்போது மலையகத்தில் வறட்சியான காலநிலை நிலவுவதால் இவ்வாறான தீ வைப்பு சம்பவங்களால் காலநிலையில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







ஸ்ரீசிகரம் அறக்கட்டளை நடத்துநர் அகிலா கைலநாதனின் தலைமையில், மஸ்கெலியா பிரவுன்லோ சிறுவர்களுக்கு உதவும் வகையில் தரம் ஒன்று முதல் ஐந்து வரையான மாணவர்களுக்கு இலவச ஆங்கில, சங்கீத வகுப்புகளை ஆரம்பித்தல் மற்றும் பெண்களுக்கு தையல் பயிற்சிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு பிரவுன்லோ கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் (17) இடம்பெற்றது.

(படங்கள்: செ.தி. பெருமாள்)

தமிழன் www.thamilan.lk

# வணிக உலகம் Business world

## NOLIMIT கொழும்பு சிட்டி சென்டர் வளாகத்தில் புதிய விற்பனை நிலைய திறப்பு விழாவை கொண்டாடியுள்ளது

இலங்கையின் முன்னணி நவநாகரீக சில்லறை விற்பனைச் சங்கிலியான NOLIMIT, கொழும்பு சிட்டி சென்டர் வளாகத்தில் புத்தம் புதிய அதிநவீன விற்பனை நிலையத்தைத் திறந்துள்ளதன் மூலம், கொழும்பின் மையத்தில் மற்றுமொரு முக்கியமான இடத்திற்குத் தனது அடிச்சுவட்டை விரிவுபடுத்தியுள்ளது. புதிய கிளை திறப்பு விழா பெப்ரவரி 12ஆம் திகதி காலை 10.30 மணிமுதல் நடைபெற்றது. மேலும் திறப்பு விழா கொண்டாட்டங்களில் இணைந்துகொள்ளுமாறு அனைத்து கொள்வனவாளர்களையும் அது சிறப்பாக வரவேற்றது. NOLIMIT தனது வாடிக்கையாளர் வீச்சினை விரிவுபடுத்தும் முயற்சியில் மற்றொரு கட்டத்தைக் கொண்டாடுகிறது. அதேநேரத்தில், தனித்துவமான கொள்வனவு அனுபவத்தையும், அதியுயர்ந்த வாடிக்கையாளர் சேவையை அனுபவிக்கும் வாய்ப்பையும் தனது வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறது. இலங்கை முழுவதும் 15 நகரங்களில் பரவியுள்ள நிலையில், இந்த புதிய விற்பனை நிலையம், பிரபல நவநாகரீக சில்லறை விற்பனை சங்கிலியின் 24ஆவது கிளையாகும்.





இக்கிளை திறப்பு விழா அனைத்து வாடிக்கையாளர்கள், விசேட விருந்தினர்கள், வணிக சமூகத்தினர் மற்றும் பொதுமக்களை சிறப்பாக வரவேற்றிருந்தது. திறப்பு விழாவைக் கொண்டாடும் வகையில், NOLIMIT கொழும்பு சிட்டி சென்டர் கிளையானது, தொடக்க நாளில் அனைத்து விருந்தினர்களையும் உற்சாகமான செயல்பாடுகளுடன் வரவேற்றது.

தொடக்க நாளில் விற்பனை நிலையத்திற்குச் சென்ற அனைத்து வாடிக்கையாளர்களும் அவர்கள் கொள்வனவுசெய்த அனைத்துப் பொருட்களுக்கும் 25% தள்ளுபடியும், அடுத்த நாள் (பெப்ரவரி 13ஆம் திகதி) விற்பனை நிலையத்திற்குச் சென்றவர்களுக்கு 20% தள்ளுபடியும் கிடைத்தது. நீண்டகாலமாக சிறப்பாக நிலைபெற்றுள்ள சில்லறை வர்த்தகநாமமாக, NOLIMIT தனது அனைத்து விற்பனை நிலையங்களிலும் ஒரு சௌகரியமான சூழ்நிலையில் சிறந்த கொள்வனவு அனுபவத்தை வழங்குவதை நோக்கமாகக்கொண்டுள்ளது.

இக்கிளை திறப்பு விழா குறித்து கருத்து தெரிவித்த NOLIMIT நிறுவனத்தின் சந்தைப்படுத்தல்துறை தலைமை அதிகாரியான ரனீஸ் ஷெரி, "கொழும்பின் மையத்தில், கொழும்பு சிட்டி சென்டரில் ஒரு மேம்படுத்தப்பட்ட விற்பனை மையத்தை திறப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். NOLIMIT இலங்கையர்களின் எப்பொழுதும் பரிணாம வளர்ச்சியடைந்துவரும் நாகரீக தேவைகளை பூர்த்திசெய்யும் ஒரு வர்த்தகநாமமாக எப்போதும் திகழ்ந்து வருகின்றது. அதேவேளை, நாட்டிலுள்ள எமது அனைத்து விற்பனை நிலையங்களிலும் உள்ள எமது வாடிக்கையாளர்களுக்கு கூடுதல் பெறுமதியையும் சௌகரியத்தையும் வழங்குகிறது. இந்த புதிய கடையை திறந்துள்ளமை, அதிநவீன நவநாகரிகத்தை வழங்குதல் மற்றும் செலவு செய்யும் பணத்திற்கான மதிப்பை வழங்குதல் ஆகியவற்றில் நாங்கள் கொண்டுள்ள அர்ப்பணிப்பைக் காண்பிக்கிறது" என்று குறிப்பிட்டார்.

NOLIMIT அனைத்து பங்குதாரர்கள் மீதும் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் நிகழ்வுகளை ஒழுங்கமைத்து பங்களிப்பதன் மூலம் உள்ளூர் சமூகங்களுடன் நெருங்கிய உறவுகளைப் பேணுவதற்கு தன்னை அர்ப்பணித்துள்ளது. இலங்கையின் வணிக மாவட்டத்தின் மையப்பகுதியிலுள்ள கொழும்பு சிட்டி சென்டரிலுள்ள புதிய விற்பனை மையம், நகர மக்களிடையே நவீன வாழ்க்கை முறையை ஊக்குவிக்கும் நாகரீகத்தின் உச்சமாகும்.

## இலங்கையின் நிர்மாணத்துறைக்கு நிலையான எதிர்காலத்தை உருவாக்குவதற்கு AGC Innovate உடன் JKP பங்காளியாகிறது

இலங்கையின் வளர்ந்துவரும் நிர்மாணத்துறையில பேண்தகைமைக்கான புதிய அளவுகோலை அமைத்தல், முன்னணி சொத்து மேம்பாட்டாளர், எளிதாக்கப்பட்ட Plasticcycle, John Keells குழுமத்தின் சமூக தொழில் முனைவோர் திட்டம், John Keels Properties மூலம் AGC Innovate (Pvt) Ltd. உடன் இணைந்து Plastic Modified Asphalt Concrete (PMAC), Crescat Boulevard மற்றும் Cinnamon Life உள்ளிட்ட அதன் கட்டுமானத் திட்டங்களுக்கு வழிவகுத்தது.

AGC Innovate உடனான புதிய கூட்டாண்மையானது, JKPஇன் விரிவடைந்துவரும் நிர்மாணத் திட்டங்களில் PMAC அடிப்படையிலான பொருட்களைப் பயன்படுத்தி நிலையான தீர்வுகளை உருவாக்குவதன் மூலம் இலங்கையின் Plasticycle நெருக்கடியைத் தீர்க்க உதவுவதை நோக்கமாகக்கொண்டுள்ளது.

"ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும் பிளாஸ்ரிக் மற்றும் மீள்சுழற்சி செய்யமுடியாத பிளாஸ்ரிக் பொருட்களால் ஏற்படும் மாசுபாடு நமது காலத்தின் மிகக் கடுமையான சுற்றுச்சூழல் பிரச்சினைகளில் ஒன்றாகும். PMACஇல் AGC Innovateஇன் நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி எமது வீதிப் பரப்புகளை நிறைவுசெய்வதன் மூலம், இலங்கையின் கட்டுமானத்துறையில் வட்டப் பொருளாதாரத்தை நோக்கிய ஒரு பாதையை நாங்கள் நிறுவுகிறோம்" என John Keells Propertiesஇன் தலைமைச் செயற்பாட்டு அதிகாரி Inoke Perera தெரிவித்தார்.

தொற்றுநோய்க்கு முன்னர், சராசரியாக 46,000 பிளாஸ்ரிக் துண்டுகள் (2,69,000 தொன்கள்) இந்தியப் பெருங்கடலின் ஒரு சதுர மைல் பகுதியை மாசுபடுத்தியதாக மதிப்பிடப்பட்டது, அதேநேரத்தில் இலங்கை தினமும் சுமார் 7,000 மெட்ரிக் தொன் சீரற்ற நிர்வகிக்கப்பட்ட திடக்கழிவுகளை உருவாக்குகிறது, அதில் 6% பிளாஸ்ரிக் கொண்டது மற்றும் பொலித்தீன் கழிவுகள். துரதிர்ஷ்டவசமாக தற்போது, பிளாஸ்ரிக் பேக்கேஜிங் மாற்றுகள் மதிப்பு, ஆயுள் மற்றும் பல்துறை ஆகியவற்றில் போட்டியிட போராடுகின்றன. எனவே, முறையற்ற விதத்தில் அகற்றப்படும் பிளாஸ்ரிக்கின் சுற்றுச்சூழல் பாதிப்புகள் மறுக்க முடியாதவை என்றாலும், அத்தகைய பொருட்களின் பயன்பாடு, குறைந்தபட்சம் குறுகிய-நடுத்தர காலத்திலாவது தொடர வாய்ப்புள்ளது.



பிளாஸ்ரிக் கழிவுகளை சேகரித்து மீள்சுழற்சி செய்வதற்கு இல்லையெனில் குறைந்தபட்சம் உக்குவதற்கு பல நூறு ஆண்டுகளாகும். பிளாஸ்ரிக் மாசுபாட்டின் பிரச்சினைக்கு தர்க்கரீதியான தீர்வு. சமூக,பொருளாதார மேம்பாட்டிற்கு துணைபுரியும் அதேவேளை, பிளாஸ்ரிக் மாசுபாட்டின் சவாலில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகளைக்கொண்ட வீதி கட்டுமானத்திற்கான PMACஇன் மேம்பாடு அத்தகைய ஒரு தீர்வாகும்.

இந்த கழிவுப்பொருட்களை தொழில்துறை மூலப்பொருளாக மாற்றுவதன் மூலம், JKP மற்றும் AGC Innovate ஆகியவைவழக்கமானதைவிட அதிக தரம்கொண்ட வீதிகளை அமைக்கும்போது, Bitumen போன்ற புதைபடிவ எரிபொருட்களின் சதவீதத்திற்கு மாற்றாக கழிவு பிளாஸ்ரிக்கைப் பயன்படுத்தும். இது பெரும்பாலும் ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்ரிக்குகளுக்கு இரண்டாம் நிலைப் பயன்பாட்டை உருவாக்குகிறது, அதேநேரத்தில் குறைந்த பசுமை இல்ல வாயு உமிழ்வை ஏற்படுத்துகிறது, அதன் கார்பன் தடயத்தைக் குறைக்கும் JKPஇன் முயற்சிகளில் மேலும் நேர்மறையான தாக்கங்களைச் செயல்படுத்துகிறது. அதேநேரத்தில், PMAC மாதிரியானது, மாற்றியமைக்கப்பட்ட வீதிகளை உருவாக்குகிறது, அவை பாதுகாப்பான, மென்மையான மற்றும் அதிக செலவு குறைந்தவையாகும்.மேலும் கணிசமாக சுற்றுச்சூழலுக்கு ஏற்றவையாகும்.


Crescat Boulevardஇல் PMAC நடைபாதை மற்றும் JKPஇன் முதன்மையான கலப்பு-மேம்பாடு, Cinnamon Life ஆகியவற்றின் மூலம் மொத்தம் 150 கிலோ மற்றும் 792 கிலோ கழிவு பிளாஸ்ரிக் மீள்சுழற்சி செய்யப்பட்டு இரண்டு சொத்துகளிலும் பாதைகளுக்கும் பயன்படுத்தப்பட்டது. இது முறையே ஏறத்தாழ 41,000 மற்றும் 2,11,000 ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்ரிக் பைகளுக்குச் சமமானதாகும், இல்லையெனில் அவை நிலப்பரப்புகளில் கொட்டப்பட்டிருக்கும் அல்லது முக்கிய நிலம் மற்றும் கடல் சுற்றுச்சூழல் அமைப்புகளின் மாசுபாட்டிற்கு பங்களிக்கும்.

இரண்டு திட்டங்களும் PMAC நடைபாதையின் பல்துறைத்திறனை நிரூபிக்க புதிய வாய்ப்புகளை வழங்கின. Crescatஇல், AGCஆனது வாடிக்கையாளர்களின் தேவைகள், பொறியியல் அளவுருக்கள், பொருந்தக்கூடிய தரநிலைகளுக்கு இணங்குதல், ஒரு தனிப்பட்ட பணியிடத்தில் இடமளிக்க முடிந்தது.

இதேபோல், Cinnamon Life, JKPஇன் சின்னமான 4.5 மில்லியன் சதுர அடி ஒருங்கிணைந்த கலப்பு-பயன்பாட்டு மேம்பாட்டில், AGC Innovate கட்டுமானம் ஏற்கனவே தொடங்கப்பட்ட பின்னர் சூழ்நிலைத் தேவைகளுக்கேற்ப கட்டுமானத் திட்டங்களை வெற்றிகரமாக மாற்றியமைத்தது. இந்த மேம்பாடானது பொது வீதியை உள்ளடக்கியதாக இருப்பதால், PMAC நடைபாதைத் திட்டத்துக்குள் Glennie Streetஐயும் உள்ளடக்குவதற்கு கொழும்பு மாநகர சபையிடமிருந்து (CMC) கூடுதல் அனுமதிகள் பெறப்பட்டன.

AGC Innovateன் பணிப்பாளரும் பிரதம தொழில்நுட்ப அதிகாரியும் மற்றும் இலங்கை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியின் முன்னாள் தலைவருமான ஜூடித் சமரநாயக்க கூறுகையில், "உட்கட்டமைப்பு அபிவிருத்தியானது சமூகத்திற்கும் நாட்டிற்கும் பெறுமதி சேர்க்கிறது. உட்கட்டமைப்பு அபிவிருத்தியானது நிலையான சூழலியல் மற்றும் சிறந்த பசுமையை உள்ளடக்கும்போது. தொழில்நுட்பம், பலன்கள் வரம்பற்றவை. இந்த சூழல் நட்பு கூட்டாண்மையில் JKP உடன் இணைந்திருப்பது AGC Innovate பாக்கியம் பெற்றுள்ளது" என தெரிவித்தார்.

இரண்டு திட்டங்களுக்கான அடித்தளம் இப்போது முடிவடைந்த நிலையில், PMAC தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி எதிர்கால வீதி அமைக்கும் திட்டங்களில் AGC Innovate உடன் தொடர்ந்து பணியாற்றுவதை JKP நோக்கமாகக்கொண்டுள்ளது. பிளாஸ்ரிக் மாசுபாட்டை அகற்றுவது மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை மேம்படுத்துவது தொடர்பான முயற்சிகளுக்கு இந்த கூட்டாண்மை மிகவும் தேவையான ஊக்கத்தை அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.






## உடல் எடை குறைப்பு வகை சிகிச்சைகளை செய்த முதலாவது தனியார் மருத்துவமனை லங்கா ஹொஸ்பிட்டல்ஸ்

சர்வதேச அங்கீகாரம் பெற்ற விருதுகள் பல வென்ற முன்னணி மருத்துவமனையான லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் அண்மையில் உடல் எடை குறைப்பு வகையிலான 100 சத்திரசிகிச்சைகளை (Bariatric Weight Loss Surgery) வெற்றிகரமாக மேற்கொண்டு தமது பயணத்தில் புதிய மைல்கல்லை எட்டியுள்ளது. உடல் எடை குறைப்பு சத்திரசிகிச்சையானது, நீண்ட அறுவைகளின்றி சிறிய துவாரமொன்றில் கெமராவொன்றை செலுத்துவதன் மூலம் மேற்கொள்ளப்படும். 48 மணித்தியாலங்களுக்குள் நோயாளிக்கு வீடு திரும்பக்கூடிய வகையில் மேற்கொள்ளப்படுகின்ற இச்சத்திரசிகிச்சையை தொடர்ந்து, குறிப்பிட்டதொரு காலப்பகுதியில் கனிசமான அளவில் உடலின் எடையை குறைக்க முடிகின்றமை இச்சத்திரசிகிச்சையின் விசேட அம்சமாகும். இச்சத்திரசிகிச்சையினால் உடல் எடை குறைவதற்கு மேலதிகமாக நீரிழிவு, தூக்கமின்மை, கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு கடுமையான




மனஅழுத்தம் மற்றும் மலட்டுத்தன்மை போன்ற பல்வேறு வியாதிகளை வெற்றிகரமாக குணப்படுத்தவும் முடியும்.

லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் கூட்டு நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி தீப்தி லொகுஆரச்சி கருத்து தெரிவிக்கையில், இவ்வாறான 100 சத்திரசிகிச்சைகளை வெற்றிகரமாக மேற்கொண்ட நாட்டின் ஒரே தனியார் மருத்துவமனையாக லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் புதிய வரலாறு படைத்துள்ளதாக குறிப்பிட்டார்.

கடந்த 07 ஆண்டுகளில் இவ்வாறான சத்திரசிகிச்சைகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்குத் தேவையான தொழில்நுட்பம், மருத்துவப் பயிற்சி மற்றும் வசதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதால், பாதிப்பு இல்லாத வகையில் சிக்கல்களை கட்டுப்படுத்தி வெற்றிகரமான முறையில் இவ்வாறான சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ள முடிந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

"உடல் எடையை குறைக்கும் சத்திரசிகிச்சைகள் பல தசாப்தங்களாக காணப்படுகின்ற போதிலும், அது இலங்கைக்கு இன்னுமே ஒப்பீட்டளவில் புதியதொரு எண்ணக்கருவாகவே உள்ளது. முன்னர் இவை திறந்த அறுவைசிகிச்சைகளாக மேற்கொள்ளப்பட்ட போதிலும் இப்பொழுது லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் மருத்துவமனையின் புதிய தொழில்நுட்பத்தோடு குறைந்தபட்ச சேத அறுவைசிகிச்சை முறையின் கீழ் மேற்கொள்ள முடியும். சத்திரசிகிச்சைக்குள்ளாகின்ற நோயாளிகள் துரிதமாக நலன் பெறுவதோடு காயங்கள் குறைவாக உள்ளமை இதன் சிறப்பம்சமாகும்'' என சத்திரசிகிச்சை குழுவின் பிரதான சிறப்பு மருத்துவர் டாக்டர் தேஜன விஜேரத்ன தெரிவித்தார்.

# உயர்தரப் பரீட்சை வினாத்தாளில் மொழிபெயர்ப்பு பிழை; தமிழ் மொழிமூல மாணவர்களுக்கெதிராக பாரிய அநீதி

## உரிய தீர்வு காணப்பட வேண்டும் என்கிறார் இம்ரான் எம்.பி.

(கந்தளாய் நிருபர்)

தற்போது நடைபெற்று வருகின்ற க.பொ.த. உயர்தர உயிரியல் பாட வினாத்தாளில் தமிழ் மொழிமூல மாணவருக்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது. பரீட்சைத் திணைக்களம் இதற்கான பரிகாரங்களைக் காணவேண்டும் என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் கோரிக்கை விடுத்துள்ளார்.

உயிரியல் பாட முதலாம் பகுதி வினாத்தாளின் தமிழ் மொழிபெயர்ப்பில் பாரிய குறைபாடுகள் இருந்ததால் மாணவர்களால் சரியான விடையெழுத முடியாத நிலையேற்பட்டதாக முன்னாள் பிரதம பரீட்சகர் ஒருவரை மேற்கோள் காட்டி ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உயர்தரப் பரீட்சையைப் பொருத்தவரை, அது மாணவர்களின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்ற பரீட்சையாகும். எனவே, இப்பரீட்சை வினாத்தாள்கள் மயக்க நிலையின்றி தெளிவாக விளங்கிக்கொள்ள கூடியதாக இருக்கவேண்டும். அப்போது தான் மாணவர்களால் வினாவுக்கேற்ற விடைகளை எழுதமுடியும். அவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் கல்வி கற்றதற்கான பிரதிபலனை அடையமுடியும்.

இந்த வருட உயிரியல் வினாத்தாளின் பல வினாக்களின் மொழிபெயர்ப்பு பிழை காரணமாக மாணவர்களால் தெளிவாக விடையைத் தீர்மானிக்க முடியாத நிலையேற்பட்டதாகவும், இதனால் பல மாணவர்களின்



எதிர்காலம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது தமிழ் மொழிமூல மாணவருக்கு இழைக்கப்பட்ட பாரிய அநீதியாகும்.

இது அவர்களது பல்கலைக்கழகத் தெரிவில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும். இந்த அநீதி கலையப்பட வேண்டும். பரீட்சைத் திணைக்களம் இந்த விடயத்தைக் கவனத்தில் கொண்டு உரிய பரிகாரம் காணப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். அல்லது இந்தப் பரீட்சையை இரத்துச் செய்து மீள் பரீட்சை நடத்தப்பட வேண்டும்.

ஒரு பரீட்சையைக் கூட சரியாக நடத்த முடியாத அளவுக்கு இந்த அரசு மிகவும் பலவீனமடைந்துள்ளது. பொருளாதார ரீதியாக மக்களை கஷ்டத்தில் தள்ளி அன்றாட உணவுக்கு அல்லல்படும் நிலையை ஏற்படுத்தியுள்ள இந்த அரசு இப்போது மாணவர்களின் எதிர்காலத்திலும் கைவைக்க ஆரம்பித்துள்ளது. ஜனநாயகத்தை நேசிப்போரால் இதனை அனுமதிக்க முடியாது.

தமிழ்ப் பேசும் மக்களுக்கு நன்மைகள் பல செய்வதாகக் கூறி அவர்களின் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றம் வந்து இந்த அரசோடு ஒட்டிக் கொண்டிருக்கின்ற தமிழ், முஸ்லிம் எம்.பிக்கள் தமிழ் மொழிமூல மாணவர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள இந்த அநீதி குறித்து வாய்மூடி மௌனமாக இருப்பது குறித்து நான் மிகவும் கவலையடைகின்றேன்.

தமிழ் மொழிமூல மாணவர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள இந்தப் பாரிய அநீதி குறித்து அவர்கள் கவனம் செலுத்தாதிருப்பது குறித்து நான் ஆச்சரியமடைகின்றேன். இது போன்ற விடயங்களில் தீர்வு பெற்றுத்தராத இவர்கள் இந்த அரசிடம் இருந்து தமிழ்ப் பேசும் மக்களுக்கு என்ன தீர்வைப் பெற்றுத் தரப்போகின்றார்கள் என்று கேட்க விரும்புகின்றேன்.

எனவே, மக்களுக்கும் மாணவர்களுக்கும் அநீதி இழைக்கும் இந்த அரசாங்கத்தையும், தமிழ்ப் பேசும் மக்களின் வாக்குகளைப் பெற்று அவர்களது உரிமைசார்ந்த விடயத்தில் கவனம் செலுத்தாது மௌனமாக இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் வீட்டுக்கு அனுப்ப வேண்டிய காலம் வந்து விட்டது. அதற்கு மக்கள் தயாராக வேண்டும். மக்களுக்காக அவர்களின் கஷ்டங்களுக்காக குரல் கொடுக்கும் எம்மோடு இணைய வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

# சுயதொழில் கைவினைஞர்களை ஊக்குவிக்க கிழக்கில் முதலாவது மரத்தளபாட விற்பனை நிலையம் திறப்பு!





(கந்தளாய் நிருபர்)

கிழக்கு மாகாணத்திலுள்ள சுயதொழில் கைவினைஞர்களை ஊக்குவிக்கவும், அவர்களுக்கான சந்தை வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுக்கும் பொருட்டு கிழக்கு மாகாண கிராமிய தொழில்துறை திணைக்களம் பாரிய திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

அதன் முதற்கட்டமாக, திருகோணமலை மாவட்ட உப்புவெளி சந்தியில் முதலாவது மரத்தளபாட விற்பனை நிலையம் நேற்று முன்தினம் மாலை (17) திறந்துவைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண கிராமிய தொழில்துறை திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் திருமதி கவிதா உதயகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு, பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் கலந்துகொண்டு குறித்த மரத்தளபாட விற்பனை நிலையத்தை திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் துஷித பீ. வணிகசிங்க, முதலமைச்சின் செயலாளர் திருமதி கலாமதி பத்மராஜா, சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன், வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம்.அன்சார், பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) ஏ.மன்சூர் உள்ளிட்ட அமைச்சின் செயலாளர்கள், உதவிச் செயலாளர்கள், மாகாண பணிப்பாளர்கள், கணக்காளர்கள் மற்றும் பலர் இதில் கலந்துகொண்டனர்.

# சம்மாந்துறையில் சமுர்த்திப் பயனாளிகளுக்கு உரித்துச்சான்றிதழ், இயந்திரங்கள் வழங்கிவைப்பு




(ஐ.எல்.எம்.நாஸிம், நூருல் ஹுதா உமர்)

சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்துக்கு அமைவாக, சமுர்த்தி பயனாளிகளுக்கு வரவு - செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டு அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி நலனுதவித்தொகை வழங்கும் நிகழ்வு சம்மாந்துறை பிரதேச செயலகத்துக்குட்பட்ட அல்- ஸிராஜ், ஹிஜ்றா, ஹுதா, மிலேனியம் சமுர்த்தி வங்கிகளில் சமுர்த்தி தலைமைபீட முகாமையாளர் யு.எல்.எம்.சலீம் இன் தலைமையில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபாவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மேலும், புதிதாக தெரிவுசெய்யப்பட்ட சமுர்த்தி பயனாளிகளுக்கான உரித்துச்சான்றிதழ் வழங்கும் நிகழ்வும், 2021ஆம் ஆண்டுக்காக அரனெலு வேலைத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான வாழ்வாதாரப்பொருட்கள், இயந்திரங்கள் வழங்கும் நிகழ்வும் இதன்போது இடம்பெற்றன.

# மட்டு. ஸ்ரீ ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலய நுழைவாயில் கோபுரத்துக்கு அடிக்கல் நாட்டிவைப்பு

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு ஸ்ரீ ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலயத்துக்கான நுழைவாயில் முகப்பு கோபுரம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் (17) சுபவேளையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு கல்லடி ஸ்ரீ ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலயத்தின் பிரதம குரு சபரீஷ சைதன்யர் தலைமையில் சிவஸ்ரீ கோ.கு.கிரிதரக் குருக்களின் விசேட கிரியை பூஜைகளுடன் முகப்பு கோபுரத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

கல்லடி - கல்முனை பிரதான வீதிக்கு முன்பாக ஸ்ரீ ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலயத்துக்கு செல்லும் பிரதான வீதியில் பொதுமக்களின் நிதிப் பங்களிப்புடன் நிர்மாணிக்கப்படவுள்ள முகப்பு கோபுரத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன், ஆலய செயலாளர் எ.ரவீந்திரன் உட்பட ஆலய குருக்கள், ஆலய நிர்வாக சபை உறுப்பினர்கள், மாநகர சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டு கோபுரத்துக்கான அடிக்கல்லினை நாட்டி வைத்தனர்.

# துறைநீலாவணையில் முதியோர் மேம்பாடு தொடர்பில் கலந்துரையாடல்

(துறைநீலாவணை நிருபர்)

மண்முனை தென்எருவில் பற்று களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட துறைநீலாவணை வடக்கு கிராம சேவையாளர் பிரிவுக்கான முதியோர் சங்கத்தினை புனரமைத்து அரசாங்கத்தினால் உதவிகள் வழங்குவதற்கான பொதுக் கூட்டமானது நேற்று முன்தினம்(17) முற்பகல் 10 மணிக்கு கிராம உத்தியோகத்தர் கந்தசாமி சுரேஸ் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலக முதியோர் மேம்பாட்டு உத்தியோகத்தர் வேலாயுதம்



பத்மினி மற்றும் முதியோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது நடப்பு ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவு நடைபெற்றதுடன், முதியோர் மேம்பாட்டு உத்தியோகத்தரினால் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற முதியோர் மேம்பாட்டு அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் முதியோருக்கு வழங்கப்படுகின்ற சலுகைகள் மற்றும் எதிர்கால அபிவிருத்திகள், முதியோர் கௌரவிப்பு தொடர்பான விளக்கம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு மாநகரசபையின் 57ஆவது சபை அமர்வில் அபிவிருத்தி விடயங்களுக்கான தீர்மானம் நிறைவேற்றம்!

(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு மாநகரசபையின் 57ஆவது சபை அமர்வு நேற்று முன்தினம் (17) மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் தலைமையில் மாநகரசபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த அமர்வில் மாநகர பிரதி முதல்வர் க.சத்தியசீலன் உட்பட மாநகரசபை உறுப்பினர்கள், பதில் செயலாளர் மற்றும் கணக்காளர் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் சபை அனுமதி பெறப்பட்டதோடு, சபைத் தீர்மானங்களுக்கெதிராக செயற்படும் மாநகரசபை ஆணையாளரின் செயற்பாடுகள் தொடர்பில் கண்டனமும் வெளியிடப்பட்டது.

இதேவேளை, நடப்பாண்டுக்காக புதிதாக அமைக்கப்பட்ட நிலையில் குழுக்களின் தலைவர்கள் சபையில் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், அவர்களின் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பிலான வெளிப்படுத்துகைகளும் இடம்பெற்றிருந்தன.

அந்தவகையில் கலைக் குழுவின் தலைவராக மா.சண்முகலிங்கமும், சுகாதாரக் குழுவின் தலைவராக க.ரகுநாதனும், வேலைக் குழுவின் தலைவராக இரா.அசோக்கும், விளையாட்டுக் குழுவின் தலைவராக து.மதனும், காணிக் குழுவின் தலைவராக வி.பூபாலராஜாவும் நூலகக் குழுவின் தலைவராக ச.கமலரூபனும், அனர்த்த முகாமைத்துவக் குழுவின் தலைவராக த.சிவானந்தராசாவும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். அத்தோடு பெண்கள் மற்றும் சிறுவர்கள் பராமரிப்பு தொடர்பில் புதிதாகக் குழுவொன்று நியமிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.







இவ்அமர்வு தொடர்பில் மாநகர முதல்வர் கருத்துத் தெரிவிக்கையில்,

இவ் அமர்வில் கடந்த மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பிலும், இம்மாதம் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டதுடன், சில இறுக்கமான தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

எமது அபிவிருத்தி விடயங்களில் மாநகர ஆணையாளரின் தலையீடுகள் அதிகமாக இருந்ததன் காரணமாக அவரிடமிருந்து மீளப்பெற்ற அதிகாரங்களை அடுத்த நிலை உத்தியோகத்தர்களுக்கு வழங்கியிருந்தோம். அத்துடன், கடந்த சபையில் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடும் அதிகாரத்தையும் அவரிடமிருந்து மீளப்பெற்றிருந்தோம். அதேபோல் கொடுப்பனவு சம்பந்தமான அங்கீகாரத்தையும் அவரிடமிருந்து மீளப்பெற்று பிரதி ஆணையாளருக்கு வழங்கியிருந்தோம். ஆனால், பிரதி ஆணையாளரும் மேற்படி விடயங்களை செய்வதற்கு முன்னர் ஆணையாளரிடம் ஒப்புதல் பெற்றுச் செய்கின்ற நிலைமை இருப்பதால், அவரிடமிருந்து எழுத்துமூல ஆவணம் பெறப்பட்டதும், அதற்கான மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதாகத் தீர்மானித்துள்ளோம்.

அதேபோல் உலக வங்கியின் நிதி மூலம் சுமார் 10 மில்லியன் ரூபா பெறுமதியில் மட்டக்களப்புப் பொதுச் சந்தையின் மேல் பகுதியில் சோலார் திட்டத்தினை மேற்கொண்டு, மாநகர சபைக்கு வருமானம் ஈட்டக்கூடிய தீர்மானத்துக்கு மாநகர சபையில் அங்கீகாரத்தினைப் பெற்றிருந்தோம். இதன் மூலம் மாநகர சபைக்கு மாதாந்தம் 02 இலட்சம் ரூபா வருமானம் கிடைக்கக் கூடியதாக இருக்கும்.

இதற்கு மேலதிகமாக உலக வங்கி நிதியின் மூலம் பொதுச் சந்தையின் மேல் பகுதியில் அமையப்பெற்றுள்ள மீன் மற்றும் இறைச்சிக் கடைகளை கீழ்ப் பகுதிக்குக் கொண்டு வருவதற்குரிய செயல்திட்டத்துக்கான அனுமதியும் பெறப்பட்டுள்ளது.

இதேபோன்று மட்டக்களப்பு நகருக்குள் பல்போசனசாலை கொண்ட அமைப்பொன்றை உருவாக்கவுள்ளோம். இதன்மூலம் உள்ளூர் முயற்சியாளர்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்கக்கூடிய விதத்திலும் நகர்ப்புற மக்களுக்கு இலகுவில் உணவுகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய விதத்திலும் 2.5 மில்லியன் ரூபா நிதியில் இத்திட்டம் அமையப் பெறவுள்ளது.

இதற்கும் மேலதிகமாக கடந்த வருடம் எங்களால் முன்னெடுக்கப்பட்ட சடலம் எரிக்கும் நிலையம் மற்றும் கலாசார மண்டப விடயம் தொடர்பிலும் தொடர்ந்தும் இழுபறி நிலையிருப்பதாலும், எமது பொறியியலாளர் பிரிவினால் ஒழுங்கு முறையான ஒத்துழைப்பு கிடைக்காமையினாலும், தங்களது இயலாமை தொடர்பில் அவர்களின் எழுத்துமூல ஆவணத்தைக் கவனத்திற் கொண்டு, நாங்கள் இதனை வெளிவளத்தின் மூலம் நடைமுறைப்படுத்துவதற்கு கேள்விக் கோரல் மேற்கொண்டு, இதற்காக ஆலோசனைக் குழுவொன்றையும் உருவாக்கி, படவரைஞர்களின் உதவியுடன் முழுக்கட்டுமான வேலைகளையும் அவர்கள் மூலமாக அமுல்படுத்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக கடந்த வருடத்தில் தீர்மானிக்கப்பட்ட மாவட்ட எல்லை வளைவுக் கோபுர வேலைகளையும் இதே குழுவினூடாக நடைமுறைப்படுத்துவதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் வெபர் மைதானத்தில் எவ்வித தொழில்நுட்ப ரீதியான ஆய்வும், அறிவும் இல்லாமல் விளையாட்டு வீரர்களுக்கு இடையூறு ஏற்படும் வண்ணம் மாநகர ஆணையாளரால் மேற்கொள்ளப்பட்ட குப்பைகளைக் கொட்டி பூமரம் நடும் செயல்திட்டத்துக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன், அதனை அப்புறப்படுத்தவும், விளையாட்டு வீரர்களுக்கு அந்த இடத்தைப் பாவனைக்கு வழங்கவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அந்த இடம்தான் விளையாட்டு வீரர்கள் உடலை உஷ்ணப்படுத்தும் இடமாகவும், பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டிகள் இடம்பெறும்போது இல்ல அமைப்பு வேலைப்பாடுகளை மேற்கொள்ளும் இடமாகவும் இருக்கின்றது.

அத்தோடு, ஊறணிச் சந்தியில் இருந்த கருவேல மரங்களை எவ்வித ஆய்வும் இன்றி, அப்புறப்படுத்தியிருப்பதாக முறைப்பாடு கிடைத்தது. கருவேல மரம் சூழலுக்குப் பாதிப்பு என்றாலும், அது தற்போது இருந்த இடம் பெரியளவில் பாதிப்பினை ஏற்படுத்தாத இடம். ஆனால், தற்போது அதனை அகற்றுவதாகக் கூறி, அதனைக் குப்பை மேட்டிலிட்டதால் அங்கிருந்து அதன் விதைகள் அதனைச் சூழவுள்ள பிரதேசத்துக்குப் பரவும். அதிலிருந்து கூட்டெரு தயாரிக்கும் நிலையத்தில் சேரும். அந்தக் கூட்டெரு மூலம் மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் பரவும் வழிவகைகளையே மாநகர ஆணையாளர் எதுவித தொழில்நுட்ப ஆலோசனைகளும் இன்றி, செயற்படுத்தியுள்ளார். இவ்விடயத்துக்கும் கண்டனத் தீர்மானமொன்று சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது என்றார்.

# மட்டு. மாவட்டத்தில் கொவிட் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை




(வாழைச்சேனை நிருபர்)

நாடளாவிய ரீதியில் கொரோனா தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுத்துவரும் நிலையில் மட்டக்களப்பு, வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பேத்தாழை குகநேசன் மண்டபத்தில் சுகாதார வைத்திய அதிகாரி தேவராஜமுதலி ஸ்ரீவ் சஞ்ஜிவ் தலைமையில் நேற்று (18) மூன்று டோஸ்கள் ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதுவரை தடுப்பூசி ஏற்றாதவர்கள் மற்றும் 2ஆம், 3ஆம் தடுப்பூசி ஏற்றாதவர்களுக்கு சினோபார்ம், பைசர் போன்ற டோஸ்கள் ஏற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அத்துடன், இடைவிலகிய மாணவர்களான 16 - 19 வயதினருக்கு 2ஆம் கட்ட பைசர் டோஸ் ஏற்றப்பட்டது.

குறித்த சுகாதார கொரோனா தடுப்பு நடவடிக்கையில் வாழைச்சேனை சுகாதார பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், உத்தியோகத்தர்கள், வாழைச்சேனை பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கோறளைப்பற்று பிரதேச சபை உத்தியோகத்தர்கள் பங்குகொண்டு ஒத்துழைப்பு வழங்கினார்கள்.

இதேவேளை, மட்டக்களப்பு - கொழும்பு பிரதான வீதியில் கொரோனா தடுப்பூசி ஏற்றாமல் போக்குவரத்தில் ஈடுபடுபவர்கள் தொடர்பாக இராணுவத்தினரினால் தடுப்பூசி அடையாள அட்டை பரிசோதிக்கப்பட்டு ஏற்றாதவர்களுக்கு உடனடியாக அவ்விடத்தில் வைத்தே தடுப்பூசி ஏற்றப்படுகிறது.

இந்நடவடிக்கை கிரான் மற்றும் நாவலடி சந்தி ஆகிய இடங்களில் இடம்பெற்று வருகிறது. பிரதேசத்தில் டெங்கு நோய் ஒழிப்பு தொடர்பான நடவடிக்கைகளையும் சுகாதரப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# மஜ்மா நகரில் புகையிரத திணைக்களத்துக்கு சொந்தமான காணியை அபகரிக்க முயற்சித்த 15 பேருக்கு எச்சரிக்கை

## பாதுகாப்புப் பிரிவுடன் இணைந்து அகற்றப்பட்டன வேலிகள்






(கல்குடா நிருபர்)

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மட்டக்களப்பு - கொழும்பு பிரதான வீதியில் மஜ்மாநகர் பிரதேசத்தில் புகையிரத திணைக்களத்திற்கு சொந்தமான காணிகளில் சட்டவிரோதமான முறையில் சில நபர்களால் அமைக்கப்பட்ட வேலிகளை புகையிரதத் திணைக்கள அதிகாரிகள் பாதுகாப்புப் பிரிவினருடன் இணைந்து அகற்றியுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

புகையிரத பாதுகாப்புச் சேவை உதவி அத்தியட்சகர் ஆர்.பி.ஏ.ரத்னமலலவின் பணிப்புரைக்கமைய மட்டக்களப்பு மாவட்ட புகையிரதப் பொறியியலாளர் ஆர்.ஜே.அலெக்சாண்டரின் அனுசரணையோடு வருகை தந்த பொலிஸார் மற்றும் புகையிரத பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இணைந்து புகையிரத காணிக்குள் அமைக்கப்பட்ட வேலியை அக்கற்றியுள்ளனர்.

புகையிரதத் திணைக்களத்திற்கு சொந்தமான காணியில் பதினைந்து நபர்கள் சட்டவிரோதமான முறையில் வேலி அமைத்த நிலையில் வேலி அகற்றப்பட்டு குறித்த நபர்களை காணிக்குள் வரவேண்டாம் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

# கணவனை - வாழ்வாதாரத்தை இழந்த பெண்ணுக்கு திருமலையில் வீடு கையளிப்பு



கணவன் இழந்த நிலையில் பிள்ளைகளால் கைவிடப்பட்ட நிலையில் நிர்க்கதியாகி வயது முதிர்ந்த நிலையில் வறுமைக்கோட்டின்கீழ் வாழ்ந்து வருகின்ற தாயாருக்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள இவ்வீடானது ஆதிபராசக்தி அறப்பணி மையத்தினால் திருகோணமலை மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட மூன்றாவது வீடு என்பது குறிப்பிடத்தக்கது.



(கிண்ணியா நிருபர்)

சுவிட்சர்லந்து பேர்ன் மாவட்டம் மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர்பீடம் கல்வி சமூகநலம் பண்பாடு அறப்பணி மையத்தினால் திருகோணமலையில் நிர்மாணிக்கப்பட்ட மூன்றாவது வீடு நேற்று (18) திறந்துவைக்கப்பட்டது.

இவ்வீட்டினை திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பொன்னம்பலம் தனேஸ்வரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு திறந்துவைத்தார்.

இந்நிகழ்வு அறப்பணி மையத்தின் திருகோணமலை மாவட்ட பொறுப்பாளர் ஆசிரியர் சரவணபவானந்தம் திருச்செந்தூரன் தலைமையில் இடம்பெற்றது.

இவ்வீடு அறப்பணி மையத்தின் நிறுவுனர் சக்தி சுவிஸ் சுரேஷ் சகோதரரின் நேரடி கண்காணிப்பிலும், சக்தி கஜமுகன் சாம் (சுவிட்சர்லாந்து) மற்றும் சுவிட்சர்லாந்து ஆதிபராசக்தி அறப்பணி மையத்தின் நிதி அனுசரணையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இதன்போது ஆறாயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப்பொருட்களும் வழங்கப்பட்டன.

# கடல் கொந்தளிப்பால் மட்டு. மீனவர்கள் பாதிப்பு



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள பெரும்பாலான கடற்பகுதியில் மீனவர்கள் தொழிலுக்குச் செல்லாமல் உள்ளதை அவதானிக்க முடிகின்றது. தற்போதைய நிலையில் கடல் கொந்தளிப்பு அதிகரித்துக் காணப்படுவதனால் தாம் தொழிலுக்குச் செல்லமுடியாத நிலைமை ஏற்படுள்ளதாகவும், இதனால் தமது தோணிகளை கரையேற்றி வைத்துள்ள தாகவும் கடற்றொழில் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

மாவட்டத்தின் களுதாவளை, தேத்தாதீவு, மாங்காடு, செட்டிப்பாளையம், களுவாஞ்சிக்குடி, ஒந்தாச்சிமடம், கோட்டைக்கல்லாறு உள்ளிட்ட பல பகுதிகளிலுள்ள மீனவர்களே இந்நிலைமையை எதிர்கொண்டுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

# மாளிகைக்காடு, சாய்ந்தமருது பாடசாலைகளுக்கு ஆங்கில பாட செயல்நூல்கள் வழங்கிவைப்பு



(மாளிகைக்காடு நிருபர்)

சாய்ந்தமருது, மாளிகைக்காடு பிரதேச மாணவர்களின் ஆங்கில கல்வியை மேம்படுத்தும் நோக்கில் குரு நிறுவனப் பணிப்பாளரும், வ்ரவ் இளைஞர் கழகத் தலைவருமான அல்-மீஸான் பௌண்டேஷன் ஸ்ரீலங்காவின் நிர்வாக செயலாளர் ஹிஷாம் ஏ பாவாவின் ஏற்பாட்டில் 'கல்வியூடாக மாற்றம்' செயற்றிட்டம் நேற்று (18) இளைஞர் சேவை மன்ற சாய்ந்தமருது பயிற்சி நிலைய கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது கமு/கமு/அல்-ஜலால் வித்தியாலயம், கமு/கமு/எம்.எஸ்.காரியப்பர் வித்தியாலயம், கமு/கமு/லீடர் எம்.எச்.எம்.அஷ்ரப் வித்தியாலயம், மாளிகைக்காடு கமு/கமு/சபீனா முஸ்லிம் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு ஆங்கில செயல்நூல் பாடப்புத்தகங்கள் மற்றும் ஆங்கில புத்தகங்கள் இதன்போது வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன், இளைஞர் சேவை மன்ற சாய்ந்தமருது பயிற்சி நிலையப் பொறுப்பதிகாரியும் இளைஞர் சேவை அதிகாரியுமான எம்.டீ.எம்.ஹாரூன், கிழக்கு மாகாண தகவல் தொழில்நுட்பப் பேரவையின் பணிப்பாளரும், கிழக்கின் கேடயம் பொதுச் செயலாளரும், அல்-மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்காவின் தவிசாளர் யூ.எல்.என்.ஹுதா உமர், மாளிகைக்காடு கமு/கமு/சபீனா முஸ்லிம் வித்தியாலய அதிபர் எம்.ஐ.எம்.அஸ்மி, சாய்ந்தமருது பிரதேச செயலக கலாச்சார உத்தியோகத்தர் ஏ.எச்.சபிக்கா, இளைஞர் சேவை அதிகாரி எம்.எம்.ஷமீலுள் இலாஹி, இளம் தொழிலதிபர் ஏ.எச்.எம்.அஸ்பாக், அல்-மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்காவின் பிரதி தவிசாளர் பீ.எம்.நாஸிக், முன்னாள் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஜி.அன்வர் உட்பட பாடசாலைகளின் பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இவேலைத்திட்டத்திற்கான செயல்நூல் பாடப்புத்தகங்களை 'சமுத்ரா வெளியீட்டகத்தினர்' இலவசமாக வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com




கெப்சோ நிறுவனத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட பெண் செயற்பாட்டாளர்கள் மற்றும் பெண் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கான செயலமர்வொன்று அண்மையில் நிந்தவூர் தோம்புக்கண்ட உல்லாச விடுதியில் நிறுவனத்தின் பணிப்பாளர் காமில் இம்தாத் தலைமையில் இடம்பெற்றது. (படங்கள்; மாவடிப்பள்ளி நிருபர்)

# தென்கிழக்குப் பல்கலையில் பொது நூலகர், பணியாளர்கள், பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான வலுவூட்டல் நிகழ்வு!






(மாளிகைக்காடு நிருபர்)

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 25ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பல்கலைக்கழக நூலகம் சமூக நலத்திட்டத்தின்கீழ் (Community outreach programme) பொத்துவில் பிரதேச சபைக்குட்பட்ட நூலகர்கள், நூலக பணியாளர்கள் மற்றும் பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கும், பொதுமக்கள் மற்றும் மாணவர்களுக்கும் தற்கால நவீன சவால்களை எதிர்நோக்கக்கூடிய வினைத்திறன்மிக்க சேவைகளை வழங்கவேண்டுமென்ற நோக்கில், ஒருநாள் வலுவூட்டல் நிகழ்ச்சி பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் (கலாநிதி) றமீஸ் அபூபக்கரின் பணிப்புரையின்பேரில் பல்கலைக்கழக நூலகர் எம்.எம்.றிபாயுடீனின் வழிகாட்டலில் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதியின் "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்தை அமுல்படுத்தும், உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கரின் எண்ணக்கருவில் உருவான பல்கலைக்கழகங்களுக்கும், சமூக கல்வி நிறுவனங்களுக்கும் இடையிலான தொடர்பினை இணைத்தலின் (10ஆம்) அங்கமாக நூலகர் எம்.எம்.றிபாயுடீன் தலைமையில் நடைபெறும் இப்பயிற்சிப்பட்டறை ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் (17) முற்பகல் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். இதில் பல்கலைக்கழக நூலகர் மற்றும் சிரேஷ்ட உதவி நூலகர்கள் இதில் வளவாளர்களாக கலந்துகொண்டனர்.

உபவேந்தர் கருத்து தெரிவிக்கையில்,

சமூகமாற்றத்தை எதிர்கொள்ளும் புத்திஜீவிகளை கல்வியினூடாக உருவாக்கவேண்டுமென்றும், தற்கால நவீன சவால்களை எதிர்நோக்கக்கூடிய வினைத்திறன்மிக்க சேவைகளை வழங்க வேண்டுமென்றும், பல்கலைக்கழகத்தை சமூகங்களில் தொடர்புபடுத்தல் வேலைத்திட்டத்தின்கீழ் துறைசார்ந்த இவ்வாறான பயிற்சிப் பட்டறைகள் கருத்தரங்குகள், வழிகாட்டல்கள், ஆலோசனைகள் போன்றவை சமகாலத்தில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

அதனைத் தொடர்ந்து தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகர் எம்.எம்.றிபாயுடீன் உரையாற்றுகையில், பல்கலைக்கழக நூலகமானது மாணவர்களின் கல்விக்காக மாத்திரமன்றி பல்கலைக்கழகத்தைச் சூழவுள்ள பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் போன்றவர்களையும் நவீன தற்காலத்துக்கு பொருத்தமானவர்களாக வளப்படுத்தவேண்டிய தார்மீகப் பொறுப்பு இந்நூலகத்துக்கு இருக்கின்றது என்றும் எதிர்காலத்தில் இதுபோன்ற பல நிகழ்வுகளை நடத்துவதற்கு நாங்கள் திட்டமிட்டுள்ளோம் என்ற செய்தியையும் குறிப்பிட்டார். மேலும் நூலக அபிவிருத்தியில் சமூகத்தின் பங்களிப்பு முக்கியத்துவம் பற்றியும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பொத்துவில் பிரதேச சபை தவிசாளர் எம்.எச்.அப்துர் ரஹீம் பொத்துவில் பிரதேசத்தில் காணப்படும் நூலகங்கள் பற்றியும் அதனை அபிவிருத்தி செய்வதற்கான தேவைகள் இருப்பதனையும் சுட்டிக்காட்டினார். அத்தோடு நூலகத்தின் தேவைகளை நிறைவேற்ற பல்கலைக்கழகங்கள் உதவிசெய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

அடுத்த நிகழ்வாக, பொத்துவில் பிரதேச நூலகங்களுக்குத் தேவையான சிறுவர் நூல்களை உபவேந்தரும் நூலகரும் இணைந்து தவிசாளருக்கு அன்பளிப்பாக வழங்கினர். இதனைத் தொடர்ந்து பொது நூலக சேவைகள் மற்றும் கற்றல் அமைப்புகளை மாற்றியமைத்தல் எனும் எண்ணக்கருவில் நூலகர் விரிவுரை ஆற்றினார். அதில் நூலக அமைப்பு, அதனை எவ்வாறு அபிவிருத்திசெய்தல், தொழிநுட்பம மற்றும் சமூக மாற்றங்கள் பற்றியும் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கட்டம் பற்றியும் சுட்டிக்காட்டினார். தொடர்ந்து எம்.சி.எம். அஸ்வர், வாசிப்பின் முக்கியத்துவம் மற்றும் மாணவர்களுக்கு வாசிப்பை ஊக்குவிக்க வேண்டும் எனவும் வழிகாட்டல் நிகழ்வுகளையும் நடத்தினார்.

இந்நிகழ்வினையடுத்து நூலகத்தில் கிடைப்பதற்கு அரிதான நூல்கள் பற்றியும் அதிலுள்ள வளங்களான இலத்திரனியல் வளங்கள், விசேட தொகுப்புகள் பற்றியும் எம்.சஜீர் தெளிவுபடுத்தினார். அதனைத் தொடர்ந்து இணையத்தள வளங்களின் பயன்பாடுகள் பற்றியும், அதில் மாணவர்கள், பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கும் பயன்தரும் இணையத்தள முகவரிகளை எம்.ஜே.ஏ.சாஜித் தெளிவுபடுத்தினார்கள்.

நூலகத்தின் பிரதான விடயமான வாசகர்களை வரவேற்றல், அவர்களை வழிநடத்தல், தற்கால மாணவர்களின் செயற்பாடுகள், அவர்கள் வாசிப்பதற்கு பொருத்தமான சூழலை அமைத்துக் கொடுக்க வேண்டும் போன்ற வழிகாட்டல்கள் தென்கிழக்குப் பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞான பீடத்தின் சிரேஷ்ட உதவி நூலகரான கலாநிதி எம்.எம்.மஸ்ரூபாவால் எடுத்துரைக்கப்பட்டது.

இறுதி நிகழ்வாக தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகத்தின் Reference section, Sri Lankan collection, University archive, Administration, Information desk, Schedule section, long-term section போன்ற பிரிவுகளை விளக்கங்களுடன் பார்வையிட்டனர்.

அந்த வகையில் பொத்துவில் பிரதேச சபைக்கு உட்பட்ட நூலகர்கள், நூலக பணியாளர்கள் மற்றும் பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கும் மாணவர்கள் தற்கால நவீன சவால்களை எதிர்கொள்ளக்கூடிய வினைத்திறன்மிக்க சேவைகளை வழங்க வேண்டும் என்ற நோக்கில் இந்நிகழ்வு நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# காலி தொழில்நுட்பப் பூங்கா நிர்மாணப் பணிகளை பார்வையிட்டார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ





காலி, வலஹன்தூவ பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் 'Galle Techno Park' (தொழில்நுட்பப் பூங்கா), ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டது.

'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்தின் பிரகாரம் தொழில்நுட்பப் புத்தாக்கல் கலாசாரத்தைக் கட்டியெழுப்பும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு, நாடு முழுவதிலும் ஐந்து 'தொழில்நுட்பப் பூங்கா'க்களை நிர்மாணிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இலங்கையைத் தொழில்நுட்பப் புத்தாக்க கேந்திர நிலையமாக மாற்றியமைத்தல், வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்தல், மேம்பட்ட தொழில்நுட்பத்துடனான புதிய நிறுவனங்களை ஊக்குவித்தல், ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட கைத்தொழில் அபிவிருத்தி, புதிய வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தல், அறிவுப் பகிர்வு, உரிய பிரதேச மக்களின் வாழ்க்கைத்தர அபிவிருத்தி மற்றும் அந்நியச் செலாவணியை ஈட்டுவதன் மூலம் தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு பங்காற்றுவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

காலி, குருநாகல், கண்டி, நுவரெலியா மற்றும் ஹபரணை போன்ற பிரதேசங்களை மையமாகக் கொண்டே இந்தத் தொழில்நுட்பப் பூங்காக்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

காலி – வலஹன்துவ தொழில்நுட்பப் பூங்கா வளாகத்துக்குநேற்று முன்தினம் பிற்பகல் வருகை தந்த ஜனாதிபதி, திட்டப் பலகையைத் திறந்து வைத்ததுடன் பூங்காவுக்கான பணிகளையும் கண்காணித்தார். காலி தொழில்நுட்பப் பூங்காவின் இலச்சினையும் ஜனாதிபதியினால் அதிகாரபூர்வமாக வெளியிட்டு வைக்கப்பட்டது.

சுமார் 30 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்படும் தொழில்நுட்ப பூங்காவின் நிர்மாணப் பணிகளை, 2023ஆம் ஆண்டு நடுப்பகுதியில் பூர்த்தி செய்வதற்கு தொழில்நுட்ப அமைச்சு எதிர்பார்த்துள்ளது.

05 ஜீ தகவல் தொடர்புடன் கூடிய நவீன தொழில்நுட்ப வசதிகள், நெனோ ஆய்வு நிறுவனம், பொழுதுபோக்கு செயற்பாடுகள், தெரிவு செய்யப்பட்ட இடங்களில் இயற்கையான சூழலுடன் கூடிய விளையாட்டு, உடல், உள ஓய்வு மையங்கள் அடங்கியதாக இந்தத் தொழில்நுட்பப் பூங்கா அமையப்பெறவுள்ளது.

காலி தொழில்நுட்பப் பூங்கா நிர்மாணிப்பு காரணமாகச் சுமார் 02ஆயிரம் பேருக்கு நேரடி வேலைவாய்ப்புகள் கிடைக்கப்பெறுவதோடு, மறைமுகமாகவும் ஏராளமான வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன என்று, நிகழ்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அதேபோன்று, கல்வி மற்றும் தொழில்நுட்பத் துறையின் முன்னேற்றத்துக்கு இந்தத் திட்டம் பெரும் பங்காற்றுவதாகவும் அமைச்சர் ரமேஸ் பத்திரண தெரிவித்தார்.

இந்தப் புதிய தொழில்நுட்பப் பூங்காக்கள், இந்நாட்டின் பொருளாதாரத்துக்குப் பெரும் பங்காற்றுமென, தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் ஜயந்த டீ சில்வா தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டு இறுதிக்குள், இந்நாட்டின் அனைத்துப் பிரஜைகளுக்கும் டிஜிட்டல் அடையாள அட்டைகளை வழங்குவதற்கான பின்புலம் அமைக்கப்படும் என்று, இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரும் டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி



இராஜாங்க அமைச்சருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். கிராம சேவகர் உட்பட ஜனாதிபதியின் செயலாளர் வரையான அனைத்து அரச சேவை செயற்பாடுகளும் டிஜிட்டல் தொழில்நுட்பத்துடன் தொடர்புபடுத்தப்படும் என்றும் ஜனாதிபதி வழங்கியுள்ள இலக்குகளைப் பூர்த்தி செய்து, எதிர்வரும் 30 மாத காலப்பகுதிக்குள் அனைத்துச் சேவைகளையும் இணையத் தொழில்நுட்பத்தின் ஊடாக முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன என்றும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

தென்மாகாண ஆளுநர் விலீ கமகே, இராஜாங்க அமைச்சர் மொஹான் பி. டீ சில்வா, காஞ்சன விஜேசேகர, ஜானக்க வக்கும்புர ஆகியோரும் தென் மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள், அரச அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

# ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதலுக்கு இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் கண்டனம்

ஊடக சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழில்முறை கூட்டு அமைப்பானதும், ஊடக சுதந்திரம் மற்றும் செய்தித்துறையினை பரிந்துரைக்கும் அமைப்புமாகிய இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் ஊடகவியலாளர்கள் தங்கள் கடமைகளை செய்யவிடாது தடுக்கும் தாக்குதல்கள் மற்றும் அச்சுறுத்தல்களை கண்டிப்பதாக தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ஊடக சுதந்திரம் மற்றும் ஊடகத் தொழிலில் ஈடுபட்டுள்ளோரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் சம்பவங்கள் குறித்து இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் அக்கறை கொண்டுள்ளது. ஊடகவியலாளர்களுக்கு பாதுகாப்பான சூழலை உறுதி செய்வதற்கு சட்டத்தினை அமுலாக்கும் அதிகாரிகள் விரைவான நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் வலியுறுத்துகின்றது.

இலங்கையில் ஜனநாயக கொள்கைகளையும் ஊடக சுதந்திரத்தையும் ஊக்குவிக்கும் தொழில் வல்லுநர்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு, எதிரான விரைவான நடவடிக்கை ஒரு பாதுகாப்பு அரணாக அமையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இளைஞனின் சடலம் நீர்வீழ்ச்சியிலிருந்து மீட்பு

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

பலாங்கொடை, கல்தோட்ட தூவிலி எல்ல நீர்வீழ்ச்சியில் நீராடியபோது காணாமல் போன இளைஞனின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காணாமல்போன இளைஞனை தேடி பொதுமக்கள், பொலிஸார் தேடுதல்களை நடத்தியும் பலனளிக்காமையால் கடற்படையின் நீர் மூழ்கிப் பிரிவு அழைக்கப்பட்டதையடுத்து இச்சடலம் புதர்களுக்குள் சிக்கியிருந்தபோது மீட்கப்பட்டுள்ளது.

காவத்தை, எந்தான சமரகந்த பிரதேசத்தை சேர்ந்த இவ்விளைஞர் நீர்வீழ்ச்சியின் மேற்பகுதியின் கல் ஒன்றில் இருந்து இன்னொரு கல்லுக்கு தாவிப் பாய முயற்சித்தபோது தவறி விழுந்தமையால் நீரலையில் சிக்கி ரிஅடித்துச் சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கைத் தூதரகத்தினால் தெஹ்ரானில் விளையாட்டு ஒத்துழைப்பு நிகழ்வு ஏற்பாடு







கொழும்பில் நடைபெறும் உலக கனிஷ்ட டென்னிஸ் சம்பியன்ஷிப் - 2022 க்கான தெரிவுப் போட்டிகளுக்காக ஈரான் தேசிய கனிஷ்ட டென்னிஸ் அணியின் இலங்கை விஜயம் தொடர்பாக, தெஹ்ரானில் உள்ள இலங்கைத் தூதரகம் ஈரானின் டென்னிஸ் கூட்டமைப்புடன் இணைந்து கடந்த 10ஆம் திகதி வியாழக்கிழமை தெஹ்ரானில் உள்ள அதன் சான்சரி வளாகத்தில் இலங்கை - ஈரான் விளையாட்டு ஒத்துழைப்பு நிகழ்வை ஏற்பாடு செய்தது.

ஈரானில் உள்ள குறிப்பிடத்தக்க டென்னிஸ் வீரர்கள், டென்னிஸ் சம்மேளனத்தின் முக்கிய அதிகாரிகள், டென்னிஸ் துறை பங்குதாரர்கள் மற்றும் கனிஷ்ட டென்னிஸ் வீரர்கள் உட்பட 35க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர். இரு நாடுகளுக்குமிடையில் தற்போதுள்ள விளையாட்டு ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவது மற்றும் ஈரானின் தேசிய கனிஷ்ட டென்னிஸ் அணிக்கு இலங்கை பற்றிய பின்னணி மற்றும் ஏனைய தொடர்புடைய தகவல்களை வழங்குவது இந்த நிகழ்வின் நோக்கங்களாகும்.

தனது ஆரம்ப உரையில் கலந்துகொண்டவர்களை வரவேற்ற ஈரானுக்கான இலங்கைத் தூதுவர் விபுலதேஜ விஸ்வநாத் அபோன்சு, இலங்கைக்கும் ஈரானுக்கும் இடையிலான ஒத்துழைப்பின் முக்கியப் பகுதியாக விளையாட்டு இனங்காணப்பட்டுள்ளது என்பதை அடிக்கோடிட்டுக் காட்டினார். கட்டாரில் நடந்த பீபா உலகக் கிண்ணம் - 2022 இல் கிடைத்த இடம் உட்பட சமீபத்திய ஈரானின் விளையாட்டு சாதனைகளை எடுத்துரைத்த தூதுவர், இரு நாடுகளும் விளையாட்டு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கும் ஏனைய நம்பிக்கைக்குரிய வாய்ப்புகளுக்கும் பெரும் ஆற்றலைக் கொண்டுள்ளன என்பதை எடுத்துரைத்தார். மேலும், விளையாட்டுத் துறையில் குறிப்பாக கிரிக்கெட், கால்பந்து, கைப்பந்து, மல்யுத்தம் மற்றும் தற்காப்புக் கலைகளில் இரு நாடுகளுக்கும் இடையே அறிவு, அனுபவங்கள், நுட்பங்கள் மற்றும் நிபுணத்துவம் ஆகியவற்றை பரிமாறிக் கொள்ள முடியும் என அவர் வலியுறுத்தினார்.

விளையாட்டு ஒத்துழைப்பு நிகழ்வின் ஊடாடும் அமர்வின் போது, இலங்கைத் தூதரகம் மற்றும் ஈரான் டென்னிஸ் சம்மேளனம் ஆகிய இரண்டும் இரு நாடுகளுக்கும் இடையிலான டென்னிஸ் துறையில் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்கான வழிகள் மற்றும் வழிமுறைகள் ஆராயப்பட்டன. தற்போதைய தரநிலைகள், தேவைகள், சவால்கள் மற்றும் வாய்ப்புகள், பகிர்வு பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தித் திட்டங்கள் உட்பட பல விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன. தூதுவர் முன்வைத்த யோசனைக்கு பதிலளிக்கும் வகையில், ஈரான் டென்னிஸ் சம்மேளனம், இலங்கை மற்றும் ஈரான் டென்னிஸ் சம்மேளனங்களுக்கு இடையில் டென்னிஸ் துறையின் அபிவிருத்தியை அடைவதற்காக கூட்டு ஒத்துழைப்புக்கான முன்மொழிவை அனுப்புவதாக உறுதியளித்தது.

ஈரான் டென்னிஸ் சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி தாவூத் அஸிஸி, தனது சுருக்கமான கருத்துகளில், இலங்கை தூதரகத்தில் தேசிய அளவிலான கனிஷ்ட டென்னிஸ் வீரர்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்களின் பங்கேற்புடன் விளையாட்டு ஒத்துழைப்பு நிகழ்வை ஏற்பாடு செய்தமைக்காக தனது மனமார்ந்த நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்தார். இலங்கை - ஈரான் டென்னிஸ் துறை ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்கு தனது பூரண ஆதரவை வழங்கிய ஈரான் டென்னிஸ் சம்மேளனத் தலைவர், ஈரானிய கனிஷ்ட டென்னிஸ் அணி இலங்கைக்கு விஜயம் செய்வதற்கான விசாக்களை வழங்குவதற்கு வழங்கிய உதவிகளுக்காக தூதரகத்திற்கு நன்றிகளைத் தெரிவித்தார்.

பங்கேற்பாளர்களுக்கு துதரகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட உயர்ரக தேநீர் வழங்கப்பட்டது. அனைத்து விருந்தினர்களுக்கும் இலங்கைத் தேநீர் மற்றும் டோக்கன்கள் அடங்கிய பரிசுப் பொதி வழங்கப்பட்டது. நிகழ்வின் போது இந்து சமுத்திரத்தின் முத்து என்ற ஆவணப்படமும் திரையிடப்பட்டது.

# மலையக மக்களின் இருப்பை பாதுகாத்து உரிமைகளை வெல்ல சங்கிலிப் போராட்டம்

## வண்ணங்களோ சின்னங்களோ அவசியமில்லையென வடிவேல் சுரேஷ் எம்.பி. தெரிவிப்பு





*(க.கிஷாந்தன்)*

மலையக மக்களின் இருப்பை பாதுகாக்கவும் தொழில் உரிமைகளை வென்றெடுப்பதற்காகவும் சங்கிலிப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளேன். அனைத்து தோட்டங்களுக்கும் பயணம் மேற்கொள்வேன். வண்ணங்களோ, சின்னங்களோ இதில் இல்லை. எனவே, எண்ணங்களுக்காக அனைவரும் பேராதரவு வழங்க வேண்டும் – என்று இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

வடிவேல் சுரேஷ் எம்.பி. தலைமையில் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தினர், தோட்டப்பகுதிகளுக்கு பயணம் மேற்கொண்டு, நாட்டு நிலைவரம் பற்றியும் தொழில்சார் விடயங்கள் குறித்தும் தெளிவுபடுத்தல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் ஓர் அங்கமாக நுவரெலியா - நானுஓயா தோட்டப்பகுதிகளில் நேற்று (18) தெளிவூட்டல் நடவடிக்கை இடம்பெற்றது. இந்நிகழ்வின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே வடிவேல் சுரேஷ் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"மலையக மக்களுக்கு எதிராக அரசால் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள அடக்குமுறைகள், மிகைவரிச் சட்டமூலத்தின் ஊடாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றில் கைவைப்பதற்கு அரசு மேற்கொள்ளும் முயற்சி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் பெருந்தோட்ட மக்களுக்கு தெளிவுபடுத்தி, விழிப்புணர்வை ஏற்படுத்திவருகின்றோம்.

எமது மக்களின் இருப்பை பாதுகாத்துக்கொள்வதற்கும், தொழில்சார் உரிமைகளை வென்றெடுப்பதற்காகவும் அனைத்து தோட்டங்களுக்கும் பயணம் மேற்கொள்ள உள்ளேன். எமக்கு வண்ணங்களோ சின்னங்களோ முக்கியமில்லை. மக்களின் எண்ணங்கள்தான் முக்கியம். எனவே, கட்சிபேதமின்றி அனைவரும் இதற்கு ஆதரவு வழங்க வேண்டும். எமது மக்களுக்காக நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் அனைத்து வழிகளிலும் போராடுவேன்.

மிகைவரிச் சட்டமூலத்தின் ஊடாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றிலிருந்து 25 வீதம் அறிவிடும் யோசனை எழுத்துமூலம் முன்வைக்கப்பட்டது. தற்போது அறவிடப்படாது என்ற உறுதிமொழி வாய்மூலம் வழங்கப்படுகின்றது. யோசனையை எழுத்துமூலம் வைத்துவிட்டு, உறுதிமொழியை வாய்மூலம் வழங்குவதை ஏற்கமுடியாது. அதுவும் எழுத்து வடிவில் வேண்டும். இந்த அரசை நம்புவதற்கு நாங்கள் முட்டாள்கள் அல்ல.

இந்த நாட்டில் மாற்றமொன்று அவசியம். அந்த மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவே இருக்கின்றது. எனவே, முடியுமானால் தேர்தலொன்றை நடத்துமாறு அரசுக்கு சவால் விடுக்கின்றோம். அது எந்த தேர்தலாக இருந்தாலும் பரவாயில்லை, நடத்தினால் மக்கள் சக்தி எந்த பக்கம் என்பது தெரியவரும்.

அதேவேளை, மலையகத்தில் ஒரு பகுதியினருக்கு மட்டும் கோதுமை மா நிவாரணம் வழங்கும் நடைமுறை ஏற்புடையதல்ல. அனைத்து தரப்பினருக்கும் அது வழங்கப்பட வேண்டும். ஏனையோருக்கு 05 ஆயிரம் ரூபா வழங்கிவிட்டு, மலையக பெருந்தோட்ட மக்களுக்கு வெறும் 40 ரூபா வழங்கப்படுகின்றது. இதுவும் ஏற்புடைய நடவடிக்கை அல்ல." – என்றார்.

# இந்திய செய்திகள்

# அகமதாபாத் குண்டுவெடிப்பு வழக்கு சம்பவம்: 38 பேருக்கு தூக்கு; 11 பேருக்கு ஆயுள்தண்டனை





குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் கடந்த 2008ஆம் ஆண்டு இடம்பெற்ற குண்டுவெப்புச் சம்பவத்துடன் தொடர்புடைய 49 குற்றவாளிகளில் 38 பேருக்கு தூக்குத் தண்டனையும், 11 பேருக்கு ஆயுள் தண்டனையும் விதித்து அகமதாபாத் சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அகமதாபாத்தில் கடந்த 2008ஆம் ஆண்டில் 70 நிமிட இடைவெளியில் 21 இடங்களில் குண்டுகள் வெடித்தன. இதில் 56 பேர் உயிரிழந்ததுடன், 200இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இதுகுறித்து பொலிஸார் விசாரணை நடத்தியதில் இந்த குண்டுவெடிப்பை இந்தியன் முஜாஹிதின் பயங்கரவாதிகள் நடத்தியது தெரிந்தது.

**தாக்குதலின் மூளை**

இந்த குண்டுவெடிப்புக்கு முக்கிய காரணமாக இருந்தவர் சிமி-ஐஎம் அமைப்பைச் சேர்ந்த அப்துல் சுபான் குரோஷி. இந்தியாவில் இந்தியன் முஜாகிதீன் தீவிரவாத அமைப்பை நிறுவ இவர் முயற்சி செய்துவந்தார். இதையடுத்து இவரை தேடப்படும் குற்றவாளியாக குஜராத் பொலிஸார் அறிவித்தனர். இந்தியாவின் பின்லேடன் என்று அறியப்பட்ட இவரை குஜராத் பொலிஸார் 2018இல் கைதுசெய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

2002இல் நடைபெற்ற கலவரத்தில் இஸ்லாமியர்கள் பலர் கொல்லப்பட்டதற்கு பழி வாங்கும் விதமாக இந்திய முஜாஹிதீன் பயங்கரவாத அமைப்பு மேற்படி அகமதாபாத்தில் குண்டுவெடிப்பை நிகழ்த்தியதாக குற்றஞ்சாட்டப்பட்டது.

இது தொடர்பாக பொலிஸார் 85 பேரை கைதுசெய்தனர். இந்த வழக்கு விசாரணை அகமதாபாத்தில் சிறப்பு நீதிமன்றத்தில் நடந்தது. 1,100இற்கும் மேற்பட்டோர் சாட்சியமளித்தனர். இந்நிலையில், இந்த வழக்கில் இரு தரப்பு விசாரணைகளும் முடிந்து தீர்ப்பை நீதிபதி ஏ.ஆர்.படேல் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் ஒத்திவைத்தார்.

13 ஆண்டுகளாக நடந்த வழக்கில் சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஏ.ஆர்.பட்டீல் கடந்த 8ஆம் திகதி தீர்ப்பு வழங்கினார். அதில் 49 பேரை குற்றவாளிகளாக அறிவித்ததுடன், 28 பேர் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை எனக்கூறி அவர்களை விடுதலைசெய்தும் உத்தரவிட்டார்.

குற்றவாளிகளுக்கான தண்டனை குறித்து நேற்று (18ஆம் திகதி) தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. அதில், 49 குற்றவாளிகளில் 38 பேருக்கு தூக்குத் தண்டனையும், மீதமுள்ள 11 பேருக்கு ஆயுள் தண்டனையும் விதித்து அகமதாபாத்தில் சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

# இசைஞானியின் பாடல்களை பயன்படுத்த இடைக்காலத் தடை

## "காப்புரிமை பெறாமல் பாடல்களை பயன்படுத்துவது தவறு" - இளையராஜா



ஒப்பந்தம் முடிந்த பின்னரும் தனது பாடல்களை எக்கோ மற்றும் அகி மியூசிக் நிறுவனங்கள் பயன்படுத்துவதாக இசையமைப்பாளர் இளையராஜா வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் எக்கோ நிறுவனத்துக்கு பாடல்களைப் பயன்படுத்த அனுமதியளித்தார்.

இதனை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் இளையராஜா மேன்முறையீடு செய்திருந்தார்.

இந்நிலையில், ''உரிய காப்புரிமை பெறாமல் தனது பாடல்களை பயன்படுத்துவது ஒலிப்பதிவு சட்டப்படி தவறு. பதிப்புரிமை என்பது எந்தவொரு பொருளின் வடிவத்திலும் படைப்பை மீண்டும் உருவாக்குவதற்கான பிரத்தியேக உரிமையாகும்'' என இளையராஜா தெரிவித்துள்ளார்

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் எக்கோ நிறுவனம் இளையராஜாவின் பாடல்களைப் பயன்படுத்த இடைக்கால தடைவிதித்து உத்தரவிட்டனர்.

எக்கோ, அகி, யுனிசிஸ், கிரி டிரேடிங் ஆகிய இசை நிறுவனங்கள் பதிலளிக்க உத்தரவிட்டு வழக்கு விசாரணை எதிர்வரும் மார்ச் 21ஆம் திகதிக்கு நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

# இலங்கை சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட 47 தமிழக மீனவர்கள் சென்னை திரும்பினர்



இலங்கை சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் 47 பேர் விமானம் மூலம் சென்னை திரும்பியுள்ளனர்.

இலங்கை கடற்படையினரால் கடந்த 2021, டிசம்பர் மாதம் கைது செய்யப்பட்ட இராமேஸ்வரம், புதுக்கோட்டை பகுதிகளைச் சேர்ந்த 47 தமிழக மீனவர்களை விடுவிக்கக்கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் போராட்டங்களை நடத்திவந்தனர்.

மேலும், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிரதமர் மோடிக்கு இதுகுறித்து கடிதமும் அனுப்பியிருந்தார்.

இந்நிலையில், சிறையிலிருந்த தமிழக மீனவர்கள் 47 பேரை இலங்கை நீதிமன்றம் விடுதலை செய்தது.

விடுவிக்கப்பட்ட மீனவர்கள் விமானம் மூலம் நேற்று சென்னை விமான நிலையத்தை அடைந்தனர். அவர்கள் அனைவரையும் மீன்வளத்துறை அதிகாரிகள் வாகனங்கள் மூலம் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

## கோடியக்கரையிலிருந்து சென்ற மீனவர்களிடம் இலங்கை கடற்கொள்ளையர்கள் அட்டூழியம்

**கோடியக்கரையிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களிடமிருந்து இலங்கை கடற்கொள்ளையர்கள் பொருட்களை பறித்துச் சென்றதாக தெரிவிக்கப்படுகின்றது. கத்தியை காட்டி மிரட்டி மீன்கள், உபகரணங்கள், செல்போன் ஆகியவற்றை கொள்ளையர்கள் பறித்துச் சென்றுள்ளனர்.**

# தமிழகத்தில் நகர்ப்புற உள்ளூராட்சித் தேர்தல் இன்று



தமிழகத்தில் நகர்ப்புற உள்ளூராட்சித் தேர்தல் இன்று நடைபெறவுள்ளது. தேர்தலுக்கான பிரசாரம் நேற்றுமுன்தினத்துடன் நிறைவடைந்தநிலையில் வாக்குப்பதிவுக்கான ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

சென்னை உட்பட 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள் மற்றும் கடம்பூர் தவிர்த்து 489 பேரூராட்சி அமைப்புகளுக்கான தேர்தல் பிரசாரம் நேற்றுமுன்தினம் மாலை 6 மணியுடன் நிறைவடைந்தது.

இதையடுத்து வாக்குப்பதிவுக்கான பணிகளில் தேர்தல் ஆணையம் மும்முரமாக ஈடுபட்டுள்ளது. வாக்குப்பதிவுக்காக 31,029 மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கொரோனா தொற்று பரவலை தடுக்க வாக்குச்சாவடிகளில் வெப்பமானி, கிருமிநாசினி, முககவசம், கையுறைகள், பாதுகாப்பு கவசம், பஞ்சு போன்றவை தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

தேர்தல் பணியில் ஒரு இலட்சத்து 33 ஆயிரம் பணியாளர்கள் ஈடுபடுகிறார்கள். ஒரு வாக்குச்சாவடிக்கு 4 வாக்குப்பதிவு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர், சின்னம் பொருத்தப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இந்த தேர்தலில் அனைத்து வாக்குச்சாவடிகளிலும் சி.சி.டி.வி. கெமரா பொருத்தப்பட்டுள்ளன.

பதற்றமான வாக்குச்சாவடிகளில் வெப் கெமரா பொருத்தப்பட்டு நேரடியாக கட்டுப்பாட்டு அறையிலிருந்து கண்காணிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வாக்குப்பதிவுக்காக தமிழகம் முழுவதும் சுமார் ஒரு இலட்சம் பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

# ஹிஜாப் தடை; குர்ஆனை தடை செய்வதற்கு சமம்

## கர்நாடகா உயர் நீதிமன்றத்தில் இஸ்லாமிய மாணவிகள்




"ஹிஜாப் பிரச்சினை ஏழை இஸ்லாமிய பெண்களின் மன ஆரோக்கியத்தை சீர்குலைக்கிறது. ஹிஜாப்பை தடை செய்வது குர்ஆனை தடை செய்வதற்கு சமம்" என்று கர்நாடகா உயர் நீதிமன்றத்தில் இஸ்லாமிய மாணவிகள் தரப்பில் வாதம் முன்வைக்கப்பட்டது.

ஹிஜாப் தடைக்கு எதிராக உடுப்பி இஸ்லாமிய மாணவிகள், கர்நாடகா உயர் நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கின் விசாரணை மூன்றாவது நாளாக நேற்று கர்நாடகா உயர் நீதிமன்றத்தில் நடந்தது.

தலைமை நீதிபதி ரிது ராஜ் அவஷ்தி, நீதிபதிகள் ஜே.எம்.காஷி, கிருஷ்ணா தீட்ஷித் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்னிலையில் நடந்த விசாரணையில் மாணவிகள் தரப்பு வாதங்கள் நடைபெற்றன. அதில் மாணவிகள் தரப்பிலிருந்து மூத்த வழக்கறிஞர் வினோத் குல்கர்னி ஆஜராகி வாதங்களை முன்வைத்தார்.

அதில், "ஹிஜாப் பிரச்சினை ஏழை இஸ்லாமிய பெண்களின் மன ஆரோக்கியத்தை சீர்குலைக்கிறது. ஹிஜாப்பை தடை செய்வது குர்ஆனை தடை செய்வதற்கு சமம்" என்று தொடங்கினார். அப்போது இடைமறித்த தலைமை நீதிபதி ரிது ராஜ் அவஷ்தி, "உங்களுக்கு ஹிஜாப்பும் குர்ஆனும் ஒன்றுதானா" என்று கேள்வி எழுப்ப, அதற்கு வினோத் குல்கர்னி, "எனக்கு மட்டுமல்ல, முழு உலகத்திற்கும் அப்படிதான். நான் ஒரு பக்தியுள்ள இந்து பிராமண சமூகத்தைச் சேர்ந்தவன். அதேநேரம், குர்ஆன் உலகம் முழுவதுமுள்ள முழு



இஸ்லாமிய சமூகத்திற்கும் பொருந்தும். குர்ஆனை புறக்கணிக்க முடியாது. ஹிஜாப் பொது ஒழுங்கிற்கு எதிரானது அல்ல. இந்த விவகாரம் தனிநபர்களின் மன ஆரோக்கியத்தை பாதிக்கிறது. ஒருவரின் மனரீதியான ஆரோக்கியத்தை காப்பது அரச நிர்வாகத்தின் கடமை. வழக்கு முடியும்வரை இஸ்லாமியர்களுக்கு புனிதமான நாளான வெள்ளிக்கிழமைகளில் மட்டுமாவது ஹிஜாப் அணிய அனுமதித்து இடைக்கால உத்தரவு போட வேண்டும்" என்று வாதிட்டார்.

குல்கர்னியை தொடர்ந்து ஒரு சமூக ஆர்வலர் சார்பாக வழக்கறிஞர் ரஹமுதல்லாஹ் கோத்வால் என்பவர் வாதாடத் தொடங்கினார். ஆனால், அவரின் மனுவில், பொதுநல வழக்குகள் தொடர்பான உயர் நீதிமன்ற விதிகள் பின்பற்றப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டிய நீதிபதிகள், "இவ்வளவு முக்கியமான மற்றும் தீவிரமான விடயத்தில் நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிக்கிறீர்கள்" என்று தெரிவித்து அவரின் மனுவை தள்ளுபடி செய்து அதிரடி காட்டினர்.

அடுத்ததாக வாதாடிய வழக்கறிஞர் சுபாஷ் ஜா, "மத்தியஸ்தம் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்" என்று கோரிக்கை விடுத்தார். அதற்கு, "அரசியலமைப்புச் சிக்கல்கள் இதில் அடங்கியுள்ளன. அதற்கு நாம் பதிலளிக்க வேண்டும். எனவே இதில் மத்தியஸ்தம் செய்ய முடியாது" என்று தெரிவித்த நீதிபதிகள் வழக்கை ஒத்திவைத்தனர்.

# முஸ்லிம்களது உரிமைகளில் கை வைக்காதே

## ஒரே நாடு, ஒரே சட்ட ஜனாதிபதி செயலணியியிடம் ஒரு இலட்சம் கையொப்பங்கள்

• எம்.எஸ்.அமீர் ஹுசைன்

"ஒரே நாடு ஒரே சட்டம்" தொடர்பான ஜனாதிபதி செயலணியின் நடவடிக்கைகளில் அதிருப்தியை வெளிப்படுத்தும் வகையிலும் முஸ்லிம்கள் இந்நாட்டில் காலா காலமாக அனுபவித்துவரும் உரிமைகளில் கை வைக்க வேண்டாம் என்று கோரியும் முஸ்லிம்களிடம் நாடளாவியரீதியல் திரட்டப்பட்ட 1,00,000இற்கும் மேற்பட்டவர்களது கையொப்பங்கள் அடங்கிய மகஜர் குறித்த செயலணியால் செயலகத்தில் கையளிக்கப் பட்டிருக்கின்றது. இலங்கை வாழ் முஸ்லிம் சமூகத்தின் நலன்களில் அக்கறை செலுத்தும் பல முஸ்லிம் அமைப்புகளால் இந்த மகஜர் கையளிக்கப்பட்டிருக்கின்றது.

விசேட அரசாங்க வர்த்தமானி அறிவித்தலுக்கமைய ஞானசார தேரரின் தலைமையில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட 13 உறுப்பினர்கள் அடங்கிய இந்த செயலணியின் அறிக்கை இம்மாதம் 28ஆம் திகதி பூர்த்திசெய்யப்பட்டு ஜனாதிபதியிடம் கையளிக்க ஏற்பாடாகி இருக்கின்றது.

ஏற்கனவே பொதுமக்களிடமிருந்து கருத்துகளை இந்த ஆணைக் குழு கோரியிருந்தபோதும் முஸ்லிம் அமைப்புகளோ முக்கியமான பிரமுகர்களோ இந்த ஆணைக்குழுவின் முன்னிலையில் தோன்றி கருத்துகளை முன்வைக்க ஆர்வம் காட்டாத நிலையில், நாளடையில் ஆணைக்குழு பக்கச்சார்பான முஸ்லிம் விரோத போக்குடைய ஒருசில தரப்பினரை ஊக்குவித்து அத்தகையவர்களது கருத்துகளுக்கு முக்கியத்துவமளித்து வந்தமை முஸ்லிம் சமூகத்தின் அதிருப்திக்கு மேலும் காரணமாக அமைந்தது.

2019ஆம் ஆண்டு ஏப்ரல் குண்டுவெடிப்பு தொடர்பாக ஆராய்ந்த விசேட ஜனாதிபதி ஆணைக்குழு செய்துள்ள பரிந்துரைகளில் குறித்த செயலணிக்கு தலைவராக நியமிக்கப்பட்டுள்ள கலபொட அத்தே ஞானசார தேரர் அக்காலப்பகுதியில் செய்துவந்துள்ள வெறுப்பு பேச்சுகளும் பிரசாரங்களும் ஒருவகையில் இந்த குண்டு தாக்குதலுக்கான பின்னணியை ஏற்படுத்தி இருப்பதால் அரசியல் மற்றும் சிவில் உரிமைகளுக்காக சர்வதேச சாசனத்தின் (ICCPR) 2007ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க சட்டத்திற்கமைய குறித்த தேரர் மீது நடவடிக்கை எடுக்கும் பின்னணியைக் கொண்டிருப்பதாக அமைந்துள்ளது என்றும் அவர் மீது நடவடிக்கை எடுப்பது உசிதமானது என்று சட்டமா அதிபருக்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.

இப்படிப்பட்ட நபர் ஒருவர் தலைமை தாங்கும் செயலணியின் மூலம் முஸ்லிம் சமூகத்திற்கு ஒரே நாடு, ஒரே சட்டம் என்ற செயலணி மூலமாக நியாயம் நடக்குமா என்ற சந்தேகம் நிலவுவதாக கருதியே முஸ்லிம் தரப்பு இந்த செயலணியை புறக்கணித்து வந்துள்ளது. ஆனாலும், இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் செயலணியின் தலைவருக்கு சார்பான முஸ்லிம் விரோத மனப்பான்மைகொண்ட, முஸ்லிம் செயற்பாடுகளில் வெறுப்பு கொண்டவர்களை ஊக்குவித்தும், இஸ்லாமிய வரையறைகளில் இல்லாதவர்கள் என்று கருதப்பட்டவர்களது கருத்துகளுக்கு முக்கியத்துவம் வழங்கி வந்தமை காரணமாகவும் நாடளாவிய ரீதியில் இவ்வாறான கையெழுத்து பெறும் நடவடிக்கைகளை முஸ்லிம் கவுன்சில் ஆரம்பித்தது என்று அதன் பிரதிநிதி ஒருவர் கூறினார்.

இந்நிலையில், பெப்ரவரி 10ஆம் திகதி 50,000 கையொப்பங்கள் அடங்கிய மகஜரை ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்சில் சார்பாக அதன் பிரதிநிதி ஹில்மி அஹமட் செயலணியின் அலுவலகத்தில் கையளித்துள்ளார். அதுபற்றி அவர் கருத்து தெரிவிக்கையில், இலங்கை வாழ் முஸ்லிம்களில் 95 வீதமானவர்கள் முஸ்லிம் தனியார் சட்டத்தை ஒழிக்கும் அரசாங்கத்தின் திட்டத்தை எதிர்க்கின்றனர். அதேநேரம் காதி நீதிமன்ற நடைமுறையில் தவறுகள், குறைபாடுகள் இருக்குமாயின் அதனை புனரமைப்பு செய்யலாம். அத்துடன், முஸ்லிம் சமூகத்தில் பெண்களுக்கு பாரபட்சம் இருக்குமாயின், அதிலும் சர்வதேச தராதரங்களுக்கு அமைவாக திருத்தங்களை செய்யமுடியும். அத்துடன், முஸ்லிம் தனியார் சட்டத்தின் அடிப்படையிலான திருமணம், விவாகரத்து மற்றும் காதி நீதிமன்ற நடைமுறைகளில் நீக்கம் செய்வதென்பதை அனுமதிக்க முடியாது. மாறாக, குறைபாடுகள் உள்ள இடங்களில் திருத்தங்களை செய்யமுடியும் என்பது அவசியமாகின்றது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

உலக செய்திகள்

# உக்ரைன் - ரஷ்யா இடையே உச்சக்கட்ட போர்ப் பதற்றம்

## அமெரிக்கா எச்சரிக்கை

**உக்ரைன் எல்லையில் மேலும் 7,000 ரஷ்ய வீரர்கள் குவிப்பு; படைகள் ஆற்றைக் கடக்க பாலம் அமைப்பு**



உக்ரைன் எல்லைகளிலிருந்து ரஷ்யா படைகளை திரும்பப் பெற்றுவருவதாக தெரிவித்துவரும் நிலையில், உக்ரைனில் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனிடையே, உக்ரைன் மீது ரஷ்யா அடுத்த சில நாட்களில் தாக்குதல் நடத்தக்கூடும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் எச்சரித்துள்ளார்.

இதேவேளை, ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் செயற்பட்டுவரும் அமெரிக்க தூதரகத்தைச் சேர்ந்த துணை தூதரக அதிகாரி உட்பட 6 பேரை ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் நாட்டை விட்டு வெளியேற்றியுள்ளார். இதை அமெரிக்காவும் உறுதிசெய்துள்ளது.

உக்ரைன் எல்லையிலுள்ள ஒருசில இடங்களிலிருந்து இராணுவத்தை வாபஸ் பெறுவதாக அறிவித்துள்ள ரஷ்யா, உக்ரைனுடன் நாங்கள் ஒருபோதும் போரை விரும்பவில்லை என்றும் மேற்கத்தேய நாடுகளுடன் பேச்சு நடத்த தயாராக இருப்பதாகவும் புட்டின் கடந்த 15ஆம் திகதி அறிவித்தார். இதனால், போர்ப் பதற்றம் தணிந்ததாக கருதப்பட்டது. இதை நம்புவதற்கு அமெரிக்காவும், நேட்டோ நாடுகளும் மறுத்துவிட்டன.

இந்நிலையில், உக்ரைன் எல்லையில் மேலும் 7,000 வீரர்களை ரஷ்யா குவித்துள்ளது என்ற பரபரப்புத் தகவலை அமெரிக்கா தெரிவித்துள்ளது. இது குறித்து அமெரிக்க அரச அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில், ''ஏதாவது ஒரு காரணம் சொல்லி உக்ரைனை ஆக்கிரமிக்கும் நோக்கத்தோடு ரஷ்யா தனது படைகளின் எண்ணிக்கையை அதிகரித்து வருகிறது. நேற்றுமுன்தினம் மேலும் 7,000 வீரர்கள் எல்லைக்கு வந்துள்ளனர்'' என்றார்.

மேலும், உக்ரைன் - பெலாரஸ் எல்லையில் மிகப்பெரிய ஆறு உள்ளது. இதை தனது படைகளும், வாகனங்களும் கடப்பதற்காக ரஷ்யா மிகப்பெரிய தற்காலிக பாலத்தை அமைத்துள்ளது. மேலும், அந்த நாட்டை மூன்று பக்கத்திலும் ரஷ்ய படைகள் சூழ்ந்துள்ளன. இவற்றை காட்டும் செயற்கைக்கோள் புகைப்படங்களை மேக்சர் என்ற செயற்கைக்கோள் நிறுவனம் வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



சோவியத் ஒன்றியம் உடைந்தபோது தனிநாடாக உருவெடுத்த உக்ரைனை கைப்பற்ற ரஷ்யா முயற்சித்து வருவதால், பல ஆண்டுகளாக இரு நாடுகளுக்கும் இடையே மோதல் நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த 2014ஆம் ஆண்டு உக்ரைனின் கிரிமியா தீபகற்பத்தை ரஷ்யா கைப்பற்றியதையடுத்து, இரு நாடுகளுக்கு இடையே மோதல் அதிகரித்தது. இதற்கிடையே, இராணுவ கூட்டமைப்பான நேட்டோ அமைப்பில் உக்ரைன் இணைவதையும் விரும்பாத ரஷ்யா, அந்நாட்டின் எல்லைகளில் படைகளை குவித்தது.


சுமார் 1.50 இலட்சத்திற்கும் மேற்பட்ட இராணுவ வீரர்கள், அதிநவீன பீரங்கிகள், போர் வாகனங்களை உக்ரைன் எல்லையில் ரஷ்யா நிலைநிறுத்தியிருந்தது. இதனால், இரு நாடுகளுக்கு இடையே கடுமையான போர்ப் பதற்றம் உருவானது. இந்த போர்ப் பதற்றத்தை தணிக்க பல்வேறு நாடுகள் முயற்சித்து வந்தன.

பல்வேறு நாட்டுத் தலைவர்களின் பேச்சுவார்த்தை மற்றும் அமெரிக்க ஜனாதிபதியின் எச்சரிக்கை என பலதரப்பு செயற்பாடுகளுக்குப் பின்னர் உக்ரைன் எல்லையிலிருக்கும் தமது நாட்டு படைகள் திரும்பப் பெறப்படுவதாக ரஷ்யா தெரிவித்தது.

இந்நிலையில்தான், உக்ரைன் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. எல்லையோர மாகாணமான டான்பஸில் ஒரு பகுதி உக்ரைனின் கட்டுப்பாட்டிலும், மற்றொரு பகுதி ரஷ்ய ஆதரவுபெற்ற பிரிவினைவாதிகளின் கட்டுப்பாட்டிலும் உள்ளன.

டான்பஸ் மாகாணத்தில் உக்ரைன் கட்டுப்பாட்டிலுள்ள ஸ்டைனிஸ்டியா லுகன்ஸ்கா என்ற நகரிலுள்ள கிராமமொன்றில் திடீரென தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அந்த கிராமத்திலுள்ள பாலர் பாடசாலை மீது நடைபெற்ற இந்தத் தாக்குதலில் மழலையர் பாடசாலையில் பணியாற்றிவந்த 3 பேர் காயமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது. ரஷ்ய ஆதரவுபெற்ற பிரிவினைவாதிகள் இந்தத் தாக்குதலில் ஈடுபட்டிருப்பதாக கூறப்படுகிறது.




இதனிடையே, இது குறித்து கூறிய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு அச்சுறுத்தல் அதிகரித்துள்ளதாகவும், அவர்கள் எல்லையிலிருந்து படைகள் எதையும் திரும்பப் பெறவில்லை, அடுத்த சில நாட்களில் உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தக்கூடும் எனவும் கூறியிருக்கிறார்.

மேலும், ரஷ்யா படைகளை திரும்பப் பெறுவதாக கூறுவதில் எந்த ஆதாரமும் இல்லை, அதில் இன்னும் சந்தேகம் நீடிக்கிறது எனவும் ஜோ பைடன் தெரிவித்திருக்கிறார். மேலும் ரஷ்ய படையெடுப்பு பற்றிய அச்சம் அதிகரித்து வருவதால், அந்நாட்டு ஜனாதிபதி புட்டினை நேரில் அழைத்து பேசும் திட்டம் தனக்கு இல்லை என்றும் ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

# புதிய 'டெல்டக்ரொன்' வைரஸ்: பிரிட்டனில் பாதிப்பு அறிகுறி



பிரித்தானியாவில், கொரோனா வைரஸின் உருமாறிய 'டெல்டக்ரொன்' வைரஸ் பாதிப்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. புதிய வைரஸ் பரவல் குறித்து ஆய்வு செய்வதாக பிரித்தானிய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸின் உருமாறிய டெல்ட்டா மற்றும் உருமாறிய ஒமிக்ரொன் வைரஸ்கள் இணைந்த 'டெல்டக்ரொன்' எனும் உருமாறிய கொரோனா வைரஸ் தற்போது பிரித்தானியாவில் பரவத் தொடங்கியுள்ளது.

சைப்ரஸ் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளரான லியோனிடாஸ் கோஸ்ட்ரிக்ஸ் என்பவர் தலைமையிலான குழு, 2021 இறுதியில் டெல்டக்ரொன் வைரஸ் பாதிப்பை முதன்முதலாக கண்டறிந்தது. இந்நிலையில், டெல்டக்ரொன் வைரஸ் பிரித்தானியாவில் பரவியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து, இந்த வைரஸ் குறித்து ஆய்வுசெய்ய, பிரித்தானிய சுகாதார அமைச்சு உத்தரவிட்டுள்ளது. இந்த ஆய்வில், டெல்டக்ரொன் குறித்த விவரங்கள் தெரியவருமென எதிர்பார்க்கப்படுகிறது.

# 'மோசமான புயல் தாக்கும்'; லண்டனுக்கு சிவப்பு எச்சரிக்கை



லண்டனை மிக மோசமான புயல் தாக்கும் என்ற அச்சத்தில் அங்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. லண்டனின் தெற்கு மற்றும் தென்கிழக்குப் பகுதிகளை புயல் கடுமையாக தாக்கும் என வானிலை அவதான நிலையம் எச்சரித்துள்ளது.

இதன் காரணமாக அங்குள்ள மக்களை வெளியேற வேண்டாம் என மாநகர நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது. அப்பகுதிகளுக்கான விமான சேவைகள் உடன் அமுலுக்கு வரும்வகையில் இடைநிறுத்தப்பட்டுள்ளன.


தற்போது புயலானது மிக வேகமாக வீசி வருவதுடன், மணிக்கு 100 கிலோமீற்றர் வேகத்தில் இன்று அல்லது நாளை வீசக்கூடும் என வானிலை அவதான நிலையம் எதிர்வுகூறியுள்ளது.

அங்கு கடந்த 32 வருடங்களில் வீசும் மிக மோசமான புயல் இதுவென சுட்டிக்காட்டியுள்ள அதிகாரிகள், ஆபத்திலிருந்து பொதுமக்களை காப்பாற்றுவதற்கு இராணுவத்தை களமிறக்கியுள்ளனர். அங்கு பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளதுடன், ரயில் உள்ளிட்ட அனைத்து போக்குவரத்துக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

## ஆப்கானில் சோகம்

# ஆழ்துளை கிணற்றில் தவறி வீழ்ந்த ஐந்து வயது சிறுவன் உயிரிழப்பு









ஆப்கானிஸ்தானில் ஆழ்த்துளை கிணற்றில் தவறி வீழ்ந்து மூன்று நாட்கள் உயிருக்குப் போராடிய சிறுவனை மீட்கும் நடவடிக்கைகள் தோல்வியில் முடிவடைந்துள்ளன. அந்நாட்டின் தெற்கு மாகாணமான ஸாபுலில் ஷோகாக் என்ற கிராமத்தில் இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அங்கு ஹரிடார் என்ற ஐந்து வயது சிறுவன் கடந்த செவ்வாய்க்கிழமை கிணற்றில் விழுந்துள்ளான். குறித்த சிறுவன் சுமார் 32 அடி ஆழத்தில் இருப்பதை மீட்புப் பணியாளர்கள் கண்டுகொண்டனர்.

இந்நிலையில் இரவு, பகல் பாராமல் சிறுவனை மீட்கும் பணிகள் தலிபான் படையினரால் மேற்கொள்ளப்பட்டுவந்தன. சிறுவன் வீழ்ந்திருந்த கிணற்றுக்கு அருகில் பாரிய குழியொன்றை தோண்டும் பணிகளும் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில், சிறுவன் உயிரிழந்துள்ளதாக தலிபான்களின் உள்துறை அமைச்சின் ஆலோசகர் அனாஸ் ஹக்கானி அறிவித்தார். ஹரிடார் எங்களை விட்டுச்சென்ற விடயத்தை மிகக் கவலையுடன் அறிவிக்கிறோம் என அவர் தெரிவித்துள்ளார்.

ஹரிடாரை உயிருடன் மீட்க முடியும் என நேற்றுக் காலை உள்துறை அமைச்சின் அதிகாரிகள் ஊடக மாநாடொன்றில் தெரிவித்திருந்தனர். எனினும், சிறுவனை மீட்கும் தலிபான்களினதும் பொதுமக்களினதும் முயற்சி தோல்வியடைந்தது.

"சிறுவனை மீட்பது மிகச் சிரமமான காரியமாகும். ஏனென்றால், மீட்புப் பணிகளை முன்னெடுத்துச் செல்லும்போது சிறுவன் மீது மண்திட்டு சரியும் அபாயம் மிக அதிகமாக உள்ளது" என ஸாபுல் மாநில பொலிஸ் பேச்சாளர் ஸாபியுல்லாஹ் ஜவ்ஹர் நேற்று மதியம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அண்மையில் மொரோக்கோவில் 5 வயது ரயான் என்ற சிறுவன் ஆழ்த்துளை கிணற்றில் தவறி வீழ்ந்த நிலையில் 5 நாட்கள் மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டும் சிறுவனை உயிருடன் மீட்க முடியாமல் போனமை குறிப்பிடத்தக்கது.

# 'ரிலாக்ஸ்' ப்ளீஸ்

**உக்ரைன் – ரஷ்ய விவகாரத்தில் உலக நாடுகள் அமைதி காக்க நூதன முறையில் வேண்டுகோள்**




உக்ரைன் - ரஷ்யா விவகாரத்தில் உலக நாடுகள் அமைதியடைய வேண்டி நூதன முறையில் மொல்டோவா நாட்டு விமானி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தனி விமானம் மூலம் வானில் வட்டமடித்த விமானி 'ரிலாக்ஸ்' என்ற ஆங்கில வார்த்தை வடிவில் ஆகாயத்தில் பயணித்துள்ளார். போர் பதற்றத்திலிருந்து மேற்கு மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் விடுதலை பெற்று நிம்மதியடையக் கோரிக்கை விடுத்துள்ளார்.

வானில் ரிலாக்ஸ் என்ற ஆங்கில எழுத்துகளின் வடிவப் பாதையில் விமானி சென்ற வீடியோ ரேடார் கண்காணிப்பு இணையதளம் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

## ஆர்ஜென்ரீனாவில் காட்டுத் தீ

# 5.18 இலட்சம் ஹெக்டேயர் நிலங்கள் எரிந்து சாம்பல்



வடக்கு ஆர்ஜென்ரீனாவில் ஏற்பட்ட காட்டுத் தீயால் சுமார் 5 இலட்சத்திற்கும் அதிகமான ஹெக்டேயர் பரப்பிலான நிலங்கள் எரிந்து சாம்பலாகின.

கொரியன்டெஸில் மலைப்பகுதியில் ஏற்பட்ட காட்டுத் தீ அதிவேகமாகப் பரவத் துவங்கியது. இதனால் சுமார் 5 இலட்சத்து 18 ஆயிரம் ஹெக்டேயர் நிலங்கள் எரிந்து போயின. இது அப்பகுதியிலுள்ள மொத்த நிலப்பரப்பின் 6 சதவீதமாகும்.

வறண்ட கால நிலையின் காரணமாக காட்டுத் தீ ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தீயை அணைக்க பல தீயணைப்பு வீரர்கள் போராடி வருகின்றனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7